(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 8(1).]

# பாராளுமன்றம்

## 8ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2013 ஏப்பிறல் 10 புதன்கிழமை வெளியிடப்பட்டது

## 2013 ஏப்பிறல் 23, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு மதியுரைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 சனவரி 14ஆம் திகதிய 1688/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு மதியுரைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 நவெம்பர் 25ஆம் திகதிய 1733/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு மதியுரைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2012 சனவரி 26ஆம் திகதிய 1742/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள்,— (203ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2013 பெப்புருவரி 08 ஆம் திகதிய 1796/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,— கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2011ஆம் ஆண்டின் 46ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவு 1ஆ உடன் சேர்த்து வாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 95 ஆம் பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மாச்சு 15 ஆம் திகதிய 1801/36 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# 2013 மே 07, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1531/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2006 முதல் இற்றை வரை,

(i) வேலைவாய்ப்பிற்காக வெளிநாடு சென்ற நபர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் மேற்கொண்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கையையும்;

(ii) வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக சென்ற நபர்களுக்காக வழங்கப்பட்ட காப்புறுதிக் காப்பீட்டின் மூலம் அரசாங்கம் திரட்டிய வருமானத்தையும்

வருடவாரியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக செல்லும் தொழிலாளர்களுக்கு காப்புறுதிக் காப்பீடுகளை வழங்குவதற்கு தகமையுடைய கம்பனிகளையும்,

(ii) மேற்படி கம்பனிகள் முறையான கேள்விப்பத்திர நடைமுறைகளினூடாக தெரிவுசெய்யப்பட்டனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2149/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய லொத்தர் சபையினால் வரவு மற்றும் போக்குவரத்து கொடுப்பனவுகளாக 2005 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை நிறுவனத்தின் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள பணத் தொகை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவுகளுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கு ஏற்புடைய ஆவணங்களை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாதிருப்பின் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி கொடுப்பனவுகளுக்கான அங்கீகாரத்தை வழங்கிய நபர் அல்லது நபர்கள் யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2224/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மஹிந்த சிந்தனை தொலை நோக்குக் கொள்கைகளில் "செமட நிவசக்-ஹிதட செவனக்" வேலைத் திட்டத்தின் கீழ், குருநாகல், அனுராதாபுரம், கண்டி ஆகிய மாவட்டங்களில் வெளிநாடுகளில் தொழில் புரிவோருக்கென்றே 15000 வீடுகளைக் கொண்ட மூன்று புதிய வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீடமைப்புக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகள் யாவை என்பதையும்;

(ii) இன்றளவில் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குறித்த வீடமைப்புக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நகரங்கள் யாவை என்பதையும்;

(iv) நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியுள்ள கருத்திட்டங்களில் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2440/ '12

கௌரவ புத்திக பத்திரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் நில்வளா திட்டத்திற்குரிய அணைக்கட்டுகளின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) இந்த அணைக்கட்டுக்களில் தற்போது அழிவடைந்துள்ள எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அழிவுற்றுள்ள குறிப்பிட்ட அணைக்கட்டுக்குள் சீர்திருத்தப்படாமை காரணமாக கமக்காரர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர் என்பதை அவர் அறிவாரா என்பதையும் ;

(ii) அவ்வாறாயின் அவற்றை சீர்திருத்த நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) இதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2524/ '12

கௌரவ அனுர திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2011ஆம் ஆண்டில் முதலாம் ஆண்டுக்கு பாடசாலைப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளல், பாடப் புத்தகங்களைப் பகிர்ந்தளித்தல், சீருடைகளைப் பகிர்ந்தளித்தல், 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் நிறைவான பாடசாலைகள் கருத்திட்டத்தை ஆரம்பித்தல் ஆகிய விடயங்களுடன் தொடர்பான ஒவ்வொரு தேசிய விழாவும்,

(i) நடத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) நடத்தப்பட்ட இடம் யாதென்பதையும்;

(iii) நடத்த செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட சகல தேசிய விழாக்களையும் நடத்த செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்தப் பணம் எவ்வாறு பெறப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2549/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பேலியக்கொடை மீன் விற்பனை நிலையத்தில் கப்பம் பெறும் சம்பவங்கள் தொடர்பாக இலங்கைப் பொலீஸுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளனவா என்பதையும்;

(ii) இம்முறைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் படி இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இம்முறைப்பாடுகளின் பேரில் கைதுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2883/ '12

கௌரவ மனுஷ நாணாயக்கார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2012 ஆம் ஆண்டில் காலி கல்வி வலயத்தில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில்,

(i) முதலாம் தரம் முதல் பதின்மூன்றாம் தரம் வரையிலான வகுப்புகளில் கல்வி கற்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வகுப்பின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) முதலாம் தரத்திற்கு நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைத் தவிர, வேறு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iii) முதலாம் தரத்திற்கு அவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ள மேற்படி மாணவர்கள் யாவர் என்பதையும்;

(iv) முதலாம் தரத்தைத் தவிர, வேறு தரங்களுக்கும் மாணவர்கள் அனுமதிக்கப் பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) ஏனைய தரங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மேற்படி மாணவர்கள் யாவர் என்பதையும்

தனித்தனியே அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலைகளுக்கு நேர்முகப் பரீட்சைகளில் சித்தியடைகின்ற மாணவர்களைத் தவிர, வேறு மாணவர்களை அனுமதிப்பதற்கு அதிகாரமளிக்கின்ற சட்டரீதியான ஆவணங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி ஆவணங்களை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2986/'11

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சமூக நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்காக நீர் மூலங்களை உபயோகித்தல் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு மாத்திரம் உபயோகிப்பதற்குள்ள நீர் மூலங்களை வேறு விடயங்களுக்காக உபயோகித்தல் ஆகிய காரணங்களால் மத்திய மலைநாட்டில் அண்ணளவாக 30,000 ஏக்கர் விவசாய நிலங்கள் நீர் இன்றி கைவிடப்படும் ஆபத்துக்கு உள்ளாகியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மத்திய மலைநாட்டில் இயற்கை நீர் மூலங்களை உபயோகித்து பயிர்ச்செய்கை செய்யப்படும் விவசாய நிலங்களின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) மத்திய மலைநாட்டில் உள்ள உபயோகிக்கக்கூடிய நீர் மூலங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்கூறப்பட்ட நீர் மூலங்களை விடுவித்து, மேற்படி விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கை செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்து, சமூக நீர் கருத்திட்டங்களுக்கு வேறு மூலோபாயத்தை பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2936/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரையான காலத்தில் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையில் இடம்பெற்ற ரூபா 245,783,998.72 மோசடியை வெளிப்படுத்தாமை தொடர்பில் அரசாங்க கணகாய்வுக்குப் பொறுப்பான மேற்பார்வை உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கூறல் பற்றி விசாரணை நடத்துவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் S-1/12/14(xiii) ஆம் இலக்க 2008 சனவரி மாத கட்டளையின்படி மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி அறிக்கையின் பரிந்துரைகள் யாதென்பதையும்;

(iii) மேற்படி கால கட்டத்தில் மேற்படி நிறுவனத்தில் கணக்காய்வுக்குப் பொறுப்பாகவிருந்த உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்சார் மேற்பார்வை உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் தற்போது இவர்கள் வகிக்கும் பதவிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி பரிந்துரைகளுக்கமைய பொறுப்புக்கூற வேண்டிய மற்றும் குற்றமிழைத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2994/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அரசாங்க சேவையில் தற்போது காணப்படுகின்ற மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வெற்றிடங்களின் எண்ணிக்கை பதவிப் பெயர்களுக்கு அமைய தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) அண்மையில் அபிவிருத்தி உதவியாளர்களாக ஆட்சேர்க்கப்பட்டு தற்போது பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள மொத்தப் பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிகளின் எண்ணிக்கை மாகாண ரீதியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3004/ ' 12

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பிரபல்யத் தன்மையின் ஒழுங்கில் எந்த வருமான பெறுமதியைக் கொண்ட முத்திரைகள் தபால் நோக்கங்கங்களுக்காக மிகவும் பிபல்யமானவைகள் என்பதையும்;

(ii) ரூபா 5 பெறுமதியான முத்திரை வழக்கமாக 2செ.மீ. X 2.5 செ.மீ. அளவைக் கொண்டதா என்பதையும்;

(iii) கப்பல் தரகர் நிறுவனத்தின் 25 வருட பூர்த்தியை கொண்டாட அச்சிடப்பட்ட ரூபா 5 பெறுமதியான முத்திரையின் அளவுகளையும்;

(iv) பேராதனையிலுள்ள தொங்குபாலம் மற்றும் மஹகந்தராவையில் அமைந்துள்ள புராதன கற்பாலம் ஆகியவை அச்சிடப்பட்டுள்ள ரூபா 10.00 பெறுமதியான இரண்டு முத்திரைகளின் அளவுகளையும்;

(v) மேலே (iii) மற்றும் (iv) இல் குறிப்பிடப்படும் ஒவ்வொரு முத்திரைக்குமான காகிதம், அச்சிடல், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், பகிர்ந்தளித்தல் மற்றும் இதர செலவுகள் உள்ளிட்ட மொத்தச் செலவையும்; மற்றும்

(vi) மேலே (iii) மற்றும் (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு முத்திரையினதும் செலவுகளுடன் வழக்கமான 2செ.மீ. X 2.5 செ.மீ. அளவிலான ரூபா 5.00 பெறுமதியான முத்திரையின் செலவின் ஒப்பீட்டையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3100/ ’12

கௌரவ பீ. ஹரிசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) வடமத்திய மாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும்,

(i) அரச பாடசாலைகள்;

(ii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தினுள் மூடப்பட்டுள்ள பாடசாலைகள்;

(iii) கடமையாற்றும் ஆசிரியர்கள்;

(iv) காணப்படுகின்ற மொத்த ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை;

(v) ஒவ்வொரு பாடத்திற்கமைய நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள்;

(vi) பதில் கடமையாற்றும் அதிபர்கள்;

(vii) தரங்களையுடைய ஆசிரியர்கள்;

(viii) தொண்டர் ஆசிரியர்கள்

எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வட மத்திய மாகாணத்தில் பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு சம்பளம் செலுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அந்தச் சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்கூறிய மாவட்டங்களில் அரச பாடசாலைகளில் ஆசிரியர்களாக சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பணியாற்றுகின்றார்களா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், அந்த எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) இவர்களுக்கு கல்வித் திணைக்களத்தின் அல்லது வேறு நிறுவனத்தின் கீழ் ஆசிரியர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) எதிர்காலத்தில் இவர்களை ஆசிரியர் சேவையில் இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3174/ ’12

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1.00 மணிவரை தனியார் போதனை வகுப்புக்களை நடாத்தவேண்டாமென கடும் சட்டங்கள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் அக்காலப்பகுதியினுள் நாட்டின் பல்வேறு இடங்களிலும் சிறிய மற்றும் பாரியளவான தனியார் போதனை வகுப்புகள் நடாத்தப்படுவதன் காரணமாக அறநெறிப் பாடசாலைகளுக்கு வருகைதருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது என்பதையும்;

(ii) அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற பாடப் புத்தகங்கள் போதியளவில் உரிய நேரத்திற்குக் கிடைப்பதில்லை என்பதையும்

(iii) அறநெறிப் பாடசாலை இறுதி ஆண்டுப் பரீட்சையை நடாத்தும் திகதிகளை மாற்றியமைப்பதானது அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும்;

(iv) அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற சீருடைக் கொடுப்பனவு உரிய நேரத்தில் கிடைப்பதில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பிள்ளைகளுக்கு அறநெறிப் பாடசாலைக் கல்வியை பழக்கப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) அறநெறிப் பாடசாலை பாடப் புத்தகங்களை ஒழுங்காக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) அதிலுள்ள தடைகள் யாவை என்பதையும்;

(iv) ஆசிரியர்களின் சீருடைக் கொடுப்பனவை உரிய நேரத்தில் பெற்றுக் கொடுப்பதற்கும், இறுதி ஆண்டுப் பரீட்சை நடைபெறுகின்ற திகதியை மாற்றியமைத்து சிறுவர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்வதைத் தடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2331/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற பாடசாலைகளில் பௌத்த தர்மத்தைக் கற்பிக்க அவசியமான ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பௌத்த சமயத்தைக் கற்பிக்க பௌத்த தர்மாசார்ய பரீட்சையில் சித்தியடைந்தவர்களை ஆசிரியர் சேவைக்கு சேர்த்துக்கொள்ளல் சம்பந்தமாக අමප/10/2376/436/052 இலக்கத்தின் கீழ் 2010 ஒற்றோபர் 28 ஆந் திகதி அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தற்போது பௌத்த தர்மாசார்ய பரீட்சையில் சித்தியடைந்துள்ளோர் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அரசாங்க ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ளும் நடைமுறைக்கு அமைவாக பௌத்த சமயத்தைக் கற்பிக்கும் பொருட்டு பௌத்த தர்மாசார்ய பரீட்சையில் சித்தியடைந்தோரைச் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்சேர்ப்பினை எவ்வளவு காலத்திற்குள் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2465/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த ஐந்து வருடங்களில்,

(i) இலங்கை கிறிக்கெட் சபைக்குச் சொந்தமான கிறிக்கெட் மைதானங்களால் ஏற்பட்ட மொத்தச் செலவினங்களை ஆண்டு அடிப்படையில் யாதென்பதையும்;

(ii) மேற்படி செலவினத்தின் ஒதுக்கீடுகளின் மூலதனம் மற்றும் வட்டி உட்கூறுகள் யாவை என்பதையும்;

(iii) (அ) (i) குறிப்பிடப்பட்ட கிறிக்கெட் மைதானங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானங்களை ஆண்டு அடிப்படையில் யாதென்பதையும்;

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2013 மே 08, புதன்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1850/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த 5 வருடங்களின்போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் 10 பாரிய அளவிலான செலவு அதிகரிப்புகளை துறைமுக மற்றும் வருட வாரியாகவும்;

(ii) மேற்படி (i) இனைத் தீர்மானிப்பதற்கு சகல பகுதிகளையும் ஒன்றுசேர்ப்பதன் கூட்டுவிளைவையும்;

(iii) செலவு அதிகரிப்பு விகிதாசாரத்திற்கேற்ப வருமான அதிகரிப்பு காணப்பட்டதா என்பதையும்;

(iv) இன்றேல், இக்குறைபாடு எவ்வாறு தீர்த்து வைக்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடந்த 6 வருடங்களில் இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர் ஒருவருக்கான வருமானம், செலவு, இலாபம் மற்றும் சேர்பெறுமதி ஆகியவற்றை வருடவாரியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2338/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) "மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கு" கொள்கைத் திட்டத்தின் மூலம், கொழும்புக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ள நிபுணத்துவ ஆஸ்பத்திரிகள் இரண்டு வீதம் ஒவ்வொரு மாகாணத்திலும் தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) தற்போது மேற்படி ஆஸ்பத்திரிகளை தாபிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2444/ '12

கௌரவ புத்திக பத்திரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தின் சியம்பலாண்டுவ பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள கொட்டியாகலை குளம் ஐம்பது வருடங்களுக்கு மேலாக எவ்வித மறுசீரமைப்புக்கும் உள்ளாக்கப்படாததால் படிப்படியாக பாழடையும் ஆபத்திற்கு உள்ளாகியுள்ளதென்பதையும்;

(ii) பெரும் போகம் மற்றும் சிறு போகம் ஆகிய இரண்டு போகங்களிலும் சுமார் நானூறு ஏக்கருக்கு நீர் வழங்கிய இக்குளத்தினூடாக தற்போது பெரும் போகத்தில் மாத்திரமே பயிர்செய்கை மேற்கொள்ளப்படுகின்றதென்பதையும்;

(iii) இக் குளத்தைச் சார்ந்ததாக பேணிவரப்பட்ட நன்னீர் மீன்பிடித்துறை தற்போது பாதிக்கப்பட்டு இதில் தங்கிவாழ்ந்தவர்கள் பொருளாதார ரீதியில் கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதையும்;

(iv) இக் குளம் துரிதமாக புனரமைக்கப்படும் பட்சத்தில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த பெருந்தொகையானவர்களுக்கு நன்மை கிட்டும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கொட்டியாகலை குளத்தை துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) இதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் தற்போது ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2532/ '12

கௌரவ அநுர திசாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2010-2011 கல்வி ஆண்டுக்காக இலங்கையின் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் வெளிநாட்டு மாணவர்களை அனுமதிக்கும் சதவீதமானது 5% வரை அதிகரிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இந்த சதவீதத்துக்கமைய மேற்படி கல்வியாண்டுக்காக ஒவ்வொரு பீடத்திற்குமென வெளிநாட்டு மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட வாய்ப்புக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) தற்போது மேற்படி ஒவ்வொரு பீடத்திலும் அனுமதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) இதன் பிரகாரம், தற்போது குறித்த ஒவ்வொரு பீடத்திலும் வெளிநாட்டு மாணவர்களுக்காக காணப்படும் வெற்றிடங்கள் யாவை;

(v) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதில் பின்பற்றப்படும் வழிமுறைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010-2011 கல்வி ஆண்டிற்காக பல்கலைக்கழக அனுமதியைப் பெற்ற வெளிநாட்டு மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்கான நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் யாவை என்பதையும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2625/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டுக்காக புதிய பாடசாலைத் தவணை தொடங்கிய திகதி யாது என்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டுக்காக பாடசாலை சீருடைகளை வழங்குவதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) 2011 ஆம் ஆண்டுக்காக பாடசாலை சீருடைகள் வழங்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(iv) அவ்வாண்டில் பாடசாலை சீருடைகளை வழங்குவதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2697/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012.05.01 ஆம் திகதியன்று அல்லது அதற்கு அண்மித்த தினத்தில் விலச்சிய சிவலாப்பிட்டிய கிராமத்தில் இடம்பெற்ற புதையல் அகழ்வு தொடர்பாக கைதுசெய்யப்பட்ட நபர்கள் யார்;

(ii) இவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை;

(iii) மேற்படி புதையல் அகழ்வை தடுக்க நடவடிக்கை எடுத்தவர்கள் யார்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறிய புதையல் அகழ்வு அரசு அறியத்தக்கவகையில் இடம் பெற்றதா;

(ii) மேற்படி புதையல் அகழ்வில் விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டனரா;

(iii) அவ்வாறெனின் அதற்கு அனுமதி வழங்கிய நபர்கள் யார்;

(iv) மேற்படி புதையல் அகழ்வை விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப் பட்டிருப்பின் அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை;

(v) விசேட அதிரடிப்படையினர் மேற்கூறிய புதையல் அகழ்வு இடம்பெற்ற தொடர்பாக ஆராய்வதற்கான நடவடிக்கைக்கு சென்றிருப்பின் அது தொடர்பாக அந்தப் பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததா

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3006/ ' 12

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நட்டாண்டு அரசிறை நிலைமை பற்றிய அறிக்கையின் நோக்கம் அதன் அரசிறை மூலோபாயக் கூற்றில் குறிப்பிடப்பட்டவாறு அரசிறை மூலோபாயத்திற்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறைச் செயலாற்றுகையை மதிப்பிடுவதற்கு பொதுமக்களை இயலச் செய்வதாகும் என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட வருடத்தின் முதல் நான்கு மாதங்களுக்கான மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மைத் தொகைகளின் ஒரு கூற்று செலவினம், வருமானம் காசுப்பாய்ச்சல், கடன்பெறுகைகள் ஆகியவை தொடர்பான செலால்லப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) 2012 யூன் 29 ஆம் திகதிய 2012 ஆம் ஆண்டுக்கான நட்டாண்டு அரசிறை நிலைமை பற்றிய அறிக்கை 2012 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்குமான

(i) மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மைச் செலவினத்தையும்;

(ii) மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மை வருமானத்தையும்;

(iii) மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மைக் காசுப்பாய்ச்சலையும்;

(iv) மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மை கடன் பெறுகைகளையும்

உள்ளடக்கியதா என அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3040/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தெதுறு ஓயாவின் இருமருங்கிலும் 40 கிலோ மீற்றர் தூரத்திற்கு பாரிய மருதமரங்களை வெட்டும் கள்ளக்கடத்தல் இடம்பெறுகின்றது என்பதையும்;

(ii) சிரன்கொட பிரதேச கிராமவாசிகள் 2012 யூன் 01 ஆம் திகதி குருநாகல் பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு அலகில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய மேற்படி வெட்டுமர கள்ளக்கடத்தலை மேற்கொண்டவர்கள் கைதுசெய்யப் பட்டிருந்தார்கள் என்பதையும்;

(iii) 2012 யூன் 01 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு கைது செய்யப்பட்ட மேற்படி கள்ளக்கடத்தல்காரர்கள் அதே தினத்தன்று பி.ப. 6.30 – 7.00 மணிக்கிடையே விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(iv) மேற்படி சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தருக்கு இரண்டு வாரங்களின் பின்னர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வாரியபொல – எல்ல பிரதேசத்திலிருந்து வெல்லவ கணேவத்தை பிரதேசம் வரை தெதுறு ஓயாவை அண்மித்ததாக இதுவரை வெட்டப்பட்டுள்ள மருதமரங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி மருதமரங்கள் அழிக்கப்பட்டமை தொடர்பாக கைது செய்யப்பட்ட கள்ளக்கடத்தல்காரர்கள் யாவர் என்பதையும்;

(iii) கைது செய்யப்பட்ட மேற்படி கள்ளக்கடத்தல்காரர்களை மேலே அ (iii) இல் குறிப்பிட்டுள்ளவாறு விடுதலை செய்து அனுப்புவதற்கு அறிவுரை வழங்கியவர்கள் யாவர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3103/ '12

கௌரவ பி.ஹரிசன்,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) அனுராதபுரம் நகரசபை ஆளுகைப் பிரதேசத்தில் காணப்படும்,

(i) மக்கள் வசிக்கும் காணித் துண்டுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் அறுதி உறுதிக் காணித் துண்டுகள், குத்தகை காணித் துண்டுகள் மற்றும் அனுமதியற்ற காணித் துண்டுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை காணிபெறுநர்களுக்கு அறுதி உறுதிகளை வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அனுராதபுரம் நகரசபை ஆளுகைப் பிரதேசத்தில் வசிக்கும் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் அப்புறப்படுத்தப்படுவார்களா என்பதையும்;

(ii) இன்றேல், இவர்களின் வதிவு அதே இடங்களிலேயே சட்டரீதியாக்கப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி அனுமதியற்ற குடியிருப்பாளர்களிடமிருந்து ஆதன வரி அல்லது வேறேதேனும் வரி அறவிடப்படுமா என்பதையும்;

(iv) மின்சார மற்றும் ஏனைய வசதிகளை வழங்கும் போது இவர்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக பரிசோதிக்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3138/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது குற்றவாளிகளாக சிறையிலிடப்பட்டுள்ளவர்களுக்கும் மரண தண்டனைக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கும் மன்னிப்பு வழங்கும் போது பின்பற்றப்படுகின்ற கொள்கை குறிப்பிடப்பட்டுள்ள எழுத்திலான கோவையொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இவ்வெழுத்திலான கோவையினை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி நடைமுறையானது நியாயமானதும் வெளிப்படையானதுமாக இருக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குற்றவாளிகளாக சிறையிலிடப்பட்டுள்ளவர்களுக்கும் மரண தண்டனைக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கும் மன்னிப்பளிக்கப்படும் போது குற்றச்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறான சந்தர்ப்பங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3287/ '12

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின் பொத்துவில் நகரில் தபால் அலுவலகமொன்று இல்லாமையினால் இப்பிரதேச மக்கள் கடும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் என்பதையும்;

(ii) ஹிதாயாபுரத்தில் பொத்துவில் மத்திய மகா வித்தியாலய வீதியில் இயங்கிவந்த உப தபால் அலுவலகம் மூடப்பட்டமையால் மக்கள் கடும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) பொதுமக்கள் முகம் கொடுக்கின்ற மேற்படி பிரச்சினைகளை கருத்திற்கொண்டு பொத்துவில் நகரில் உப தபால் அலுவலகமொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2342/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு" கொள்கைத் திட்டத்தின் மூலம் சிறுவயதில் குறையூட்டத்துக்கு ஆளாகின்ற பிள்ளைகளை இந்நிலையிலிருந்து விடுவிப்பதற்குத் தேவையான அனைத்து பால், மருந்து, விட்டமின் மற்றும் உணவு வகைகளை 'ஜனசபா' ஊடாக விநியோகிப்பதற்கான உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது இவ்வேலைத் திட்டம் அமுல்படுகின்றதான என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இது செயற்படுத்தப்படும் 'ஜனசபா' அலுவலகங்கள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2469/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "தெயட்டகிருல" கண்காட்சி தொடர்பாக,

(i) இற்றைவரை நடாத்தப்பட்ட கண்காட்சிகளின் எண்ணிக்கையையும்;

(ii) அக்கண்காட்சிகள் ஒவ்வொன்றும் நடத்தப்பட்ட இடங்களையும்;

(iii) ஒவ்வொரு கண்காட்சிக்குமான செலவினத்தை வெவ்வேறாகவும்;

(iv) எதிர்காலத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கண்காட்சிகளையும்

அவர் கூறுவாரா?

(ஆ) அனுராதபுர மாவட்டத்தில் நடத்தப்பட்ட "தெயட்டகிருல" கண்காட்சியுடன் தொடர்புபட்டதாக,

(i) அது நடத்தப்பட்ட திகதியையும்;

(ii) கண்காட்சித் திடலுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட காணியின் அமைவிடம் மற்றும் அதன் அளவையும்;

(iii) மொத்தச் செலவு மற்றும் ஒவ்வொரு அமைச்சுக்கான செலவையும்;

(iv) மூலதனப் பொருட்களுக்காகச் செலவிட்ட தொகையை மொத்தச் செலவினத்தின் சதவீதமாகவும்;

(v) எஞ்சியுள்ள மூலதனப் பொருட்கள் அல்லது கட்டிடங்களையும்;

(vi) மேற்குறிப்பிட்ட மூலதனப் பொருட்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வாறு நியாயப்படுத்தப்படுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3204/ '12

கௌரவ பி. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 - 2011 ஆம் ஆண்டு கால கட்டத்தில் வருடாந்தம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பழ வகைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பழ வகையினதும் கிலோ ஒன்றிற்கான இன்றைய விலை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இறக்குமதி செய்யப்பட்ட பழங்களை நீண்டகாலம் பேணி வைத்திருப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட முறையியல்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி முறையியல்கள் மனித உடலுக்கு உகந்ததா என்பதையும்;

(iii) சுகாதார திணைக்களத்திலிருந்து அல்லது வேறொரு நிறுவனத்திலிருந்து மேற்படி முறையியல் தொடர்பில் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) உள்நாட்டு பழங்களை நீண்டகாலம் பேணி வைத்திருப்பதற்கு பயன்படுத்தப்படும் முறையியல்கள் யாவை என்பதையும்;

(ii) உள்நாட்டு பழங்களை விரைவாக கனியச் செய்வதற்கு பயன்படுத்தப்படும் முறையியல்கள் யாவை என்தையும்;

(iii) மேற்படி முறையியல்களுக்கு கமத்தொழில் திணைக்களம் அல்லது நுகர்வோர் அதிகார சபை அனுமதி அளித்துள்ளதா என்பதையும்;

(iv) பழங்களை கனியச் செய்வதற்கு இரசாயன பதார்த்தங்களை பயன்படுத்துவதால் மனித உடலுக்கு பாதிப்பு ஏற்படாதென கமத்தொழில் திணைக்களத்தின் மூலம் நுகர்வோருக்கு உறுதியளிக்கப்படுமா என்பதையும்;

(v) நுகர்வோருக்கு சுத்தமானதும் தரமானதுமான பழ வகைகளை வழங்குவதற்காக வேலைத்திட்டமொன்றை தயாரிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3326/ '12

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தின் தொடம்கஸ்லந்த தேர்தல் தொகுதியில் ரிதீகம பிரதேச செலயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதானமான பாடசாலையொன்றான பானகமுவ அந்நூர் மத்திய மஹா வித்தியாலயத்தில் விளையாட்டு மைதானமொன்றுக்கு கடும் தேவை நிலவுகின்றது என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலை மாணவர்களின் பெற்றோர் விளையாட்டு மைதானமொன்றை நிர்மாணிப்பதற்காக இரண்டு ஏக்கர் காணியைக் கொள்வனவு செய்து பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேட்டுநில வயல் நிலமான மேற்படி காணியை விளையாட்டு மைதானமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 மே 09, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1898/ '11

கௌரவ புத்திக பதிரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கடவான குளக்கட்டு புலிப் பயங்கரவாதிகளால் தகர்க்கப்பட்டு சுமார் இருபத்தாறு வருடங்கள் கடந்திருந்த போதிலும் இன்றுவரை இது திருத்தப்படாமையால் விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க முடியாதுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த வாவியை மறுசீரமைப்பதில் உள்ள தடைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரச்சினைகளைத் தீர்த்து துரிதமாக வாவியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) இதற்காக தற்போது நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2069/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்டபதற்கு,— (3)

(அ) 2009 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை கொழும்பு பங்குச் சந்தையில் பணத்தை முதலீடு செய்துள்ள,

(i) வெளிநாட்டு நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொரு நிறுவனமும் முதலீடு செய்துள்ள பணத்தொகை யாது;

(ii) மேற்படி முதலீடுகளில் தற்போது தமது முதலீட்டினை நீக்கிக்கொண்டுள்ள நிறுவனங்கள் யாவை;

(iii) மேற்படி முதலீடுகள் நீக்கிக்கொள்ளப்பட்ட திகதிகள் யாவை;

(iv) மேற்படி முதலீடுகளை நீக்கிக்கொண்டமைக்கான காரணங்கள் காட்டப்பட்டுள்ளனவா;

(v) ஆமெனில், அக்காரணங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2189/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 1970 - 1977 ஆண்டுகளின் போதான ஆட்சிக்காலத்தில் பாசிக்குடாவில் பெற்றோலியம் கண்டுபிடிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அது எப்போது கண்டுபிடிக்கப்பட்டது என்பதையும்;

(iii) கண்டுபிடிக்கப்பட்ட பெற்றோலியத்தின் அளவையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கையில் ஒற்றோபர் 2011 இல் பெற்றோலியம் கண்டுபிடிக்கப்பட்டதென தற்போதுள்ள பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சர் பிரகடனப்படுத்தினாரா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், கண்டுபிடிக்கப்பட்ட அளவையும்;

(iii) எப்போது அது உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யப்படும் என்பதையும்;

(iv) எண்ணெய், எரிவாயு விலைகள் எப்போது குறைக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2214/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மஹிந்த சிந்தனை இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைத் திட்டத்தின் ஜனசெவன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மத்திய வகுப்பினருக்கு சலுகை விலையில் பெற்றுக்கொடுப்பதற்காக மாடி வீடுகள் நிர்மாணிக்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மத்திய வகுப்பினருக்கு சலுகை விலையில் பெற்றுக்கொடுப்பதற்காக மாடி வீடுகளை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) இற்றைவரை நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ள மேற்படி மாடி வீடுகளின் எண்ணிகை யாதென்பதையும்;

(iii) மேற்படி மாடி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2546/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2009ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை இலங்கை இராணுவத்திற்கு, விமானப் படைக்கு மற்றும் கடற்படைக்கு உணவு வழங்கலை மேற்கொள்கின்ற ஆட்களும் நிறுவனங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஆட்களையும் நிறுவனங்களையும் தெரிவு செய்கையில் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்காக கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த ஆட்களும் நிறுவனங்களும் யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் சமர்ப்பித்த விலைகள் யாவையென்பதையும்;

(v) தெரிவுசெய்யப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்கள் சமர்ப்பித்த விலைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2972/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகையைக் கூட செலுத்த முடியாதளவுக்கு மத்திய மாகாண சபை பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதென்பதையும்;

(ii) விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகை அந்த மாகாண சபையின் ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து அறவிடப்பட்ட போதிலும் அந்தப் பணம் ஊழியர்களின் ஓய்வூதியக் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஓய்வூதியத் திணைக்களத்துக்கு மத்திய மாகாண சபையினால் செலுத்த வேண்டியுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இதுவரை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகைக்காக கழிக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) ஓய்வூதியத் திணைக்களத்துக்கு செலுத்தப்பட இருந்த பணத்தை அந்த கணக்குகளில் வரவு வைக்க முடியாமைக்கான காரணம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மத்திய மாகாண சபை ஊழியர்களின் பங்களிப்புத் தொகைகளை இவர்களது ஓய்வூதிய கணக்குகளில் வரவு வைப்பதற்கும்;

(ii) இந்த மாகாண சபையில் நிலவும் நிதி மோசடி தொடர்பாக ஆராய்வதற்கும்;

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3094/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 1996- 2006 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையில் இடம்பெற்ற மோசடிகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமையின் காரணமாக கணக்காய்வுப் பரிசோதகர் ஜயவர்த்தன என்பவர் மோசடிச் செயலொன்றை மேற்கொண்டுள்ளாரா என்பது பற்றி முறையானதொரு விசாரணையை நடாத்துமாறு பொலிஸ் திணைக்களத்தின், கொழும்பு மோசடிப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கணக்காய்வுப் பரிசோதகர் இலஞ்சம் பெற்றுள்ளாரா என்பதை உறுதி செய்து கொள்வதற்கான விசாரணையொன்றை நடாத்துமாறு இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர் தொழில்வாய்ப்புக்காக வெளிநாடு செல்வதற்கு சம்பளமற்ற லீவு அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) முறையான குழுவொன்றினால் நடாத்தப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கையின் சிபார்சுகளை அமுல்படுத்தாது, மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இவருக்கு லீவு அங்கீகரிக்கப்பட்டுள்ளமை சட்டவிரோதமானது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3141/ '12

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) படல்கும்புற நகரத்தின் பிரதான வீதியின் இருமருங்கிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கு மேலாக இரண்டு மின்கடத்தி நிலையங்களை இணைக்கின்றதான அதிக வோல்ற்றளவு கொண்ட (66000 வோல்ற்) மின்கம்பி முறையொன்று நிறுவப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) நகரமொன்றின் மத்தியில் மேலே குறிப்பிட்ட விதத்தில் மின்சாரக் கம்பியை பொருத்தாதிருத்தல் பொதுவான கொள்கை என்பதையும்,

(ii) அவ்வாறு இருக்கும் பொது நகரத்தில் மேற்படி அதிக வோல்ற்றளவு கொண்ட மின்சாரக் கம்பிகளை பொருத்துதல் நகரத்தின் அபிவிருத்திக்கும் நகரவாசிகளுக்கும் பாரிய தடையாகுமென்பதையும்

அவர் ஏற்றுக் கொள்கிறாரா?

(இ) ஆமெனில், மேற்படி அதிக வோல்ற்றளவு கொண்ட மின்சாரக் கம்பிமுறைமை பொருத்தப்பட்டுள்ள வழியை மாற்றியமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3166/ '12

கௌரவ ஈ. சரவணபவன்,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பொது நிருவாக சுற்றறிக்கை இல.49/89 இன்படி ஆதனங்களுக்கான இழப்பீடு வழங்குவதற்கு வடக்கு கிழக்கு மாகாண சபை அமைச்சு நடவடிக்கை எடுத்த போது அந்த அமைச்சின் சிபாரிசுடன் புனர்வாழ்வளிப்பு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுக்கு கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைவருக்கும் இழப்பீடு செலுத்தப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறு செலுத்தப்படவில்லையெனில், செலுத்தப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) நட்ட ஈடு செலுத்தப்படாத விண்ணப்பதாரர்களுக்கு குறிப்பிட்ட இழப்பீட்டுத் தொகையை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடந்த சந்தர்ப்பத்தில் 49/89 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி வேண்டுகோள் விடுத்தவர்களில் இதுவரை இழப்பீடு கிடைக்காத, பாதிக்கப்பட்டவர்களில் சிலர் நலன்புரி முகாம்களிலிருந்து வந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களில் மீள குடியமர்ந்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா?

(இ) மேற்கூறியவர்களுக்கு துரிதமாக இழப்பீடு வழங்கி அவர்களது வாழ்க்கையை சுமுக நிலைக்கு கொண்டுவருவதற்கு ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3205/ '12

கௌரவ பி. ஹரிசன்,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள மொத்த பாலர் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பாலர் பாடசாலைகளின் எண்ணிக்கை பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் சேவையாற்றும் பாலர் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) இவர்களது பெயர், முகவரிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி பாலர் பாடசாலை ஆசிரியர்களை அரச நிரந்தர சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாலர் பாடசாலைகள் பேணிவரப்படுகின்ற கட்டிடங்களின் நிலைமை யாதென்பதையும்;

(ii) நிரந்தர கட்டிடங்கள் அற்ற பாலர் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மின்சார வசதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள பாலர் பாடசாலைகளின் எண்ணிக்கை பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) பாலர் பாடசாலைகளுக்கென ஏதேனும் கொடுப்பனவு வழங்கப்படுகின்றதா என்பதையும்

(v) ஆமெனின் அதன் பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மின்சாரம், மலசலகூடம், கட்டிடம் ஆகிய வசதிகளற்ற பாலர் பாடசாலைகளுக்கு மேற்படி வசதிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) வட மத்திய மாகாண சபையினால் பாலர் பாடசாலைகளுக்கு பாலர் பாடசாலைகளுக்காக வழங்கப்படும் வசதிகள் யாவை என்பதையும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2449/ '12

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அக்குரஸ்ஸ மற்றும் அத்துரலிய பிரதேச சபைகளினால் சேகரிக்கப்படும் குப்பை கூழங்கள் கொடபிட்டிய, பானதுகம, கனஹலாகம, கவுஸ்வத்த, மற்றும் கொலுவத்த ஹேன ஆகிய கிராமங்களின் மத்தியில் உள்ள ரசீனாவத்த என்ற இடத்தில் குவிக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) அந்த இடத்தில் குப்பை கூழங்கள் குவிக்கப்படுவதனால் பிரதேச மக்கள் கடுமையான சுகாதார அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ரசீனாவத்த என்ற இடத்தில் குப்பை கூழங்கள் குவிக்கப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் ;

(ii) தற்போது குப்பை கூழங்களைப் போடுவதற்கு மாற்றிடம் ஒன்று தெரிவு செய்யப்படுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறெனின் அந்த இடம் எது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2510/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 மார்ச்சு மாதம் ஜெனீவாவில் இடம் பெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் கலந்துகொண்ட இலங்கை தூதுக் குழுவில் உள்ளடங்கியவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி கூட்டத்தொடரில் கலந்துகொண்டவர்களின் பெயர் மற்றும் பதவிகள் யாவை;

(iii) மேற்படி தூதுக் குழுவுக்கு செலவான மொத்தப் பணத் தொகை யாது;

(iv) மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணையை தோற்கடிப்பதற்கு பின்பற்றப்பட்ட செயன்முறைகளும் உபாயங்களும் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2713/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 மார்ச்சு மாதம் ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் சபைக்கு இலங்கைக்கு எதிராக தீர்மானமொன்றை கொண்டு வரமுன், அமெரிக்க இராஜாங்க வெளியுறவுச் செயலாளருடனான முதல் சந்திப்பு உத்தியோகபூர்வமாக எப்போது இடம்பெற்றது என்பதையும் ;

(ii) இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்களையும்;

(iii) மேற்கூறிய சந்திப்பின் பின்னர், மேற்கூறியவாறான தீர்மானமொன்றை அமெரிக்கா கொண்டுவரலாமென்று எதிர்பார்க்கப்பட்டதா என்பதையும்;

(iv) இலங்கையைப் பொறுத்தவரை புறக்கணிப்பு, அகந்தை, செயற்திறனின்மை என்பன, மேற்கூறிய தீர்மானத்தில் இலங்கைத்தரப்பு தோல்வியடைய காரணமாய் அமைந்தனவா என்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட பிரகடனத்துடன் தொடர்புடைய, இற்றைவரை மேற்கொள்ளப்பட்ட தகுந்த நடவடிக்கைகளையும்;

(ii) அரசாங்கம் தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு, 2012 மே 18 ஆம் திகதி அமெரிக்க இராஜாங்க வெளியுறவுச் செயலாளர் திருமதி ஹிலரி கிளின்டனைச் சந்திக்க ஏன் இணக்கம் தெரிவித்தது என்பதையும்;

(iii) அங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்களையும் அச்சந்திப்பின் பிரதிபலனாக தற்போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2772/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 ஆம் ஆண்டளவில் இலங்கையில் 18 – 22 வயதுக்கிடையிலான இளைஞர்கள் அண்ணளவாக எத்தனை பேர் என்பதை அவர் இச்சபைக்குத் தெவரிவிப்பாரா?

(ஆ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கு - 2010 இல் உள்ளடங்கியுள்ள "18 வயதுக்கும் 22 வயதுக்குமிடையிலான சகல இளைஞர்களுக்கும் விருப்பின் பிரகாரம் தேவையான மூன்றாம் நிலைக் கல்வியை அல்லது பயிற்சியை பெற்றுக்கொள்வதற்கு ரூபா 2 இலட்சம் வரையான பணத் தொகையை ஒதுக்கித் தருவேன்" என்ற வாக்குறுதியின் பிரகாரம் இன்றளவில் மேற்படி பணத் தொகை வழங்கப்பட்டுள்ள இளைஞர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இதற்காக வருடாந்தம் ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அப் பணத் தொகை வழங்கப்படும் செயல்முறை யாதென்பதையும்;

(iv) வருடமொன்றினுள் மேலே குறிப்பிட்டவாறான பயிற்சியை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டுள்ள இளைஞர்களின் எண்ணிக்கையொன்று உள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்த திகதியிலிருந்து இதுவரை இதற்குத் தெரிவு செய்யப்பட்ட இளைஞர்களின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3207/ '12

கௌரவ பி. ஹரிசன்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 – 2012 வரை புகையிரதத் திணைக்களம் பெற்றுள்ள நட்டத்தை ஈடுசெய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

(ii) புகையிரதத் திணைக்களம் அதிகமாக நட்டமடைவதற்குக் காரணமாகியிருப்பது, தூரப் பயணச் சேவைகளை அமுல்படுத்தியுள்ளமையா அல்லது குறுந்தூர பயணச் சேவைகளா என்பதையும்;

(iii) 2005 – 2012 காலப் பகுதிக்குள் பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக புகையிரத்தை பயன்படுத்துதல் அதிகரித்துள்ளதா அல்லது குறைவடைந்துள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறு குறைவடைந்திருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) எரிபொருளை ஏற்றிச் செல்வதற்கு புகையிரதங்களைப் பயன்படுத்துவது இலாபகரமான முறையொன்றாக உள்ள போதிலும், இம்முறை பரவலாக பயன்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2013 மே 10, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1899/ '11

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) காலி மாவட்டத்தின் எல்பிட்டிய வலயக்கல்வி காரியாலத்திற்கு உரித்தாயிருந்த இம்புல்பிட்டிய, கா/ராமதொல கனிஷ்ட வித்தியாலயம் இற்றைக்கு சில வருடங்களுக்கு முன்னர் மூடப்பட்டமையினால் கட்டிடங்கள் உள்ளிட்ட ஏனைய வளங்கள் அழிவடைந்து வருகின்றன என்பதையும்;

(ii) தற்போது மேற்படி பாடசாலைக்கான நிலத்தை அயலவர்கள் கைப்பற்றக்கூடிய ஆபத்தான நிலைமை காணப்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பலவந்தமாக பாடசாலைக் காணியை கைப்பற்றுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) கா/ராமதொல கனிஷ்ட வித்தியாலயத்திற்குச் சொந்தமான நிலத்தையும் கட்டிடங்களையும் பயனுள்ள வேறு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில் அத்திட்டம் யாதென்பதையும்;

(iv) இதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2121/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு குத்தகை அடிப்படையில் வாகனங்கள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், பெறப்பட்டுள்ள வாகனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி வாகனங்கள் எப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) மேற்படி வாகனங்களை வழங்கிய குத்தகை நிறுவனங்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி வாகனங்களைப் பெற்றுக்கொண்ட ஆண்டுகள் யாவை என்பதையும்;

(vi) தற்போது இந்த வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருப்பின், விடுவிக்கப்பட்ட ஆண்டுகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2187/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நாட்டில் இயங்காமலிருக்கும் அரசாங்க தொழில் முயற்சிகளின் எண்ணிக்கையையும்;

(ii) அம்முயற்சிகளின் பெயர்களையும்;

(iii) அந்நிறுவனங்களில் தற்போது பணிபுரிந்துகொண்டிருக்கும் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கையையும்;

(iv) மேற்படி நிறுவனங்களின் இற்றைவரையான மொத்த நட்டத்தையும்;

(v) அந்நிறுவனங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இயங்காமலிருக்கும் அரசாங்க முயற்சிகள் தனியார்மயப்படுத்தப்படவுள்ளனவா அல்லது மூடப்படவுள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், அவை இத்தருணத்தில் ஏன் மீள்மூலதனமாக்கப்படுகின்றன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2215/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மகிந்த சிந்தனை இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைகளில் ஜனசெவன நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் வருடமொன்றில் தலா 25 வீடுகளை நிர்மாணிப்பதாக வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின் பிரகாரம் தற்போது நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு பயனாளிகள் குடியமர்த்தப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வீடுகள் அமைந்துள்ள கிராமங்களின் பெயர்கள் யாதென்பதையும்;

(iii) வீடொன்றை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2537/ '12

கௌரவ அநுர திசாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை ஒளிபரப்பும் உரிமையினை அரச தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு மேலதிகமாக தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு வழங்குவதன் அடிப்படை யாது;

(ii) கடந்த தினம் இடம்பெற்ற கொமன் வெல்த் பாங்க் (Common Wealth Bank) கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியை இலங்கையில் ஒளிபரப்பிய தொலைக்காட்சி அலைவரிசை யாது;

(iii) மேற்படி அலைவரிசையை அதற்கெனத் தெரிவு செய்ததன் அடிப்படை யாது;

(iv) சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை ஒளிபரப்புவதற்கு அனைத்து தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கும் அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2777/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012.01.01 ஆம் திகதியளவில் விவசாய ஓய்வூதிய நிதியத்தில் காணப்பட்ட மொத்தச் சொத்துக்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) விவசாய ஓய்வூதியம் கணிப்பிடப்படும் கொள்கையை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) விவசாய ஓய்வூதியம் உரிய திகதியில், உரிய முறையில் செலுத்தத் தவறியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3164/ '12

கௌரவ பாலித தெவரப்பெரும,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மத்துகம புனித மேரி வீதி என முன்பு அழைக்கப்பட்ட தற்போதைய குமார வெல்கம மாவத்தையில் 1991ஆம் ஆண்டு தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்டு பின்னர் 2005.03.30ஆம் திகதி பிரதேச சபை அங்கீகாரத்தின் படி நிரந்தரமாக நிர்மாணிக்கப்பட்டு மின்சாரத்தையும் பெற்றிருந்த 70 கடைகள் திடீரென உடைத்து அகற்றப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இதன் காரணமாக 70 குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் தற்போது நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

(iii) புதிய கடைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக பிரதேச சபையானது ஒவ்வொரு கடை உரிமையாளர்களிடமிருந்து ரூபா 100,000.00 முற்பணத் தொகையைப் பெற்றுள்ளதென்பதையும்;

(iv) புதிய கடைகளை நிர்மாணிப்பதற்காக பிரதேச சபைக்குச் சொந்தமான காணியொன்றில் மண் பரிசோதனை நடைபெற்றுள்ள போதிலும் இதுவரை இவை நிர்மாணிக்கப்பட்டு வியாபாரிகளுக்கு வழங்கப்படாதமையினால் அவர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கடைகளை உடைத்து அகற்றுவதற்கு ஆலோசனை வழங்கியோர் யாவர் என்பதையும்;

(ii) புதிய கடைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக அறவிடப்பட்ட முற்பணத் தொகை சம்பந்தமாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) புதிய கடைகள் நிர்மாணிக்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) கடைகளை இழந்த வியாபாரிகளுக்கு புதிய கடைகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2450/ '12

கௌரவ புத்திக பத்திரண,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறையிலிருந்து கதிர்காமம் வரை அதிவேக நெடுஞ்சாலையொன்றை அமைப்பதற்காக தற்போது திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், குறித்த கருத்திட்டத்திற்கென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி நிதி பெறப்படுவது உள்நாட்டு நிதியங்களிலிருந்தா இல்லாவிடின் வெளிநாட்டு நிதியங்களிலிருந்தா என்பதையும்;

(iv) உள்நாடு மற்றும் வெளிநாட்டிலிருந்து பெறப்டும் நிதியங்களின் அளவு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) மேற்படி நிதியை வழங்கும் நிறுவனங்கள் அல்லது நாடுகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்படுவதன் காரணமாக நில்வலா ஆற்றுப்பள்ளத்தாக்கில் அமைந்துள்ள பல கிராமங்கள் வெள்ளப்பெருக்குக்கு உள்ளாகலாமென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) இந்நிலைமைகளை தவிர்ப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்படுவதன் காரணமாக இழக்க நேரிடும் காணிகள், பயிர்செய்கை உள்ளிட்ட ஏனைய சொத்துகளுக்கு இழப்பீடு வழங்கும் திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) அதற்கென கடைபிடிக்கப்படும் முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2513/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வட மாகாணத்தின் சம்பத்நுவர பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மொனரவெவ கிராமமானது மீள்குடியேற்ற வேலைத்திட்டத்தின் கீழ் உருவான ஒரு கிராமம் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி கிராமத்தில் மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி கிராமத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு அரச அனுசரணையுடன் வழங்கப்படும் நிவாரணங்கள் யாவையென்தையும்;

(iii) குடும்பமொன்றுக்கு மேற்படி நிவாரணத்தை வழங்குவதற்கு அரசு செலவு செய்த மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2714/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இன்றுள்ளவாறு நாட்டிலுள்ள தேசிய வைத்தியசாலைகளின் மற்றும் தனியார் வைத்தியசாலைகளின் எண்ணிக்கையை அவர் தனித்தனியாக கூறுவாரா?

(ஆ) மேற்கூறப்பட்ட வைத்தியசாலைகள் தொடர்பில்,

(i) மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(ii) படுக்கைகளுக்கும் வைத்தியர்களுக்கும் இடையிலான விகிதம் யாதென்பதையும்;

(iii) படுக்கைகளுக்கும் தாதியர்களுக்கும் இடையிலான விகிதம் யாதென்பதையும்;

(iv) வைத்தியர்களுக்கும் தாதியர்களுக்கும் நோயாளிகளுக்கும் இடையிலான விகிதம் யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2773/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நன்னீர் மற்றும் உவர் நீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற மீனவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) 2010 மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கின் கீழ் "சகல மீனவர்களுக்கும் உபகரணத் தொகுதியொன்றை வழங்குவேன்" என அளிக்கப்பட்ட வாக்குறுதியின் பிரகாரம் இன்றளவில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ள மீனவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி உபகரணத் தொகுதிகள் வழங்கப்படாத மீனவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி விடயத்துக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட ஆண்டிலிருந்து இதுவரை வருடாந்தம் ஒதுக்கப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(v) ஒரு உபகரணத் தொகுதிக்கு செலவாகும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி உபகரணத் தொகுதியில் உள்ளடங்குகின்ற மீன்பிடி உபகரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி தொகுதிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், அவை வழங்கப்பட்ட செயல்முறை யாதென்பதையும்;

(iv) இதுவரை மேலே குறிப்பிட்டுள்ள மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படாத மீனவர்களுக்கு அந்த உபகரணங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2452/ '12

கௌரவ புத்திக பத்திரண,—உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) மொனறாகலை மாவட்டத்தில், மடுல்ல பிரதேச சபைக்குச் சொந்தமான ஜீப் வண்டியொன்றும் கெப் வண்டியொன்றும் பிரதேச சபை வளாகத்தில் பல ஆண்டுகளாக சிதைவுற்று வருவதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச சபையில், மேலே குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் அழிவடைய விடப்பட்டுள்ளமை வளங்களின் விரயமாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(ii) இந்த வாகனங்களைத் திருத்தி பயன்பாட்டிற்கு எடுக்காமைக்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மடுல்ல பிரதேச சபை மேற்படி இரண்டு வாகனங்களையும் பயன்பாட்டிற்கு எடுக்காவிடின் அவற்றை ஏலத்தில் விட்டு வருமானம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருப்பது ஏன் என்பதையும்;

(ii) இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ள தடையேதுமிருப்பின் அவை யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2559/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005, 2006, 2007, 2008, 2009 மற்றும் 2010 ஆகிய ஒவ்வொரு வருடத்திலும் கல்விக்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை அந்தந்த வருடங்களுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெவ்வேறாக எத்தனை சதவீதம் என்பதையும்;

(ii) கல்வித்துறையின் அபிவிருத்திக்காக மேற்கூறியவாறு ஒதுக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதங்கள் இதற்குப் போதுமானதாயுள்ளதா என்பதையும்;

(iii) கல்வித்துறையில் நிலவும் தற்போதைய நிலைமையின்படி அதன் முன்னேற்றத்துக்காக இதை விட கூடுதலான பணத்தொகை ஒதுக்கப்பட வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2715/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர்களையும்;

(ii) கூறப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தில் எப்போது சமர்ப்பிக்கப்பட்டதென்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேற்கூறிய அறிக்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பரிந்துரைகளின் எண்ணிக்கையையும்;

(ii) அவை எப்போது நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதையும்;

(iii) கூறப்பட்ட அறிக்கையில் எவை நடைமுறைப்படுத்தப்படாதது என்பதையும்;

(iv) மேற்கூறிய ஆணைக்குழு அரசாங்கத்தினாலேயே நியமிக்கப்பட்டிருப்பினும் அதன் பரிந்துரைகளை அரசாங்கம் ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2775/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஜனசெவன பத்து இலட்சம் குடியிருப்புகள் மற்றும் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2600வது ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு "சசுனட்ட சவிய" எனும் பெயரில் வீடமைப்புத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் நிதியியல் நடவடிக்கைகளின் கட்டுப்பாட்டுக்காக நாணய நம்பிக்கைப்பொறுப்பு சபையொன்று அல்லது பிறிதொரு குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பின், அதன் அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்துக்கான நிதியத்தை பெற்றுக்கொள்ளும் வழிமுறை யாததென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்துடன் இணைத்துக்கொள்வதற்காக தற்போது இனம்காணப்பட்டுள்ள விகாரைகள் யாவையென்பதையும்;

(iv) குறித்த நிகழ்ச்சித் திட்டம் தற்போது செயற்படுத்தப்பட்டுள்ள விகாரைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி விகாரைகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகள் அல்லது அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி கருத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்ட ஆண்டொன்று உள்ளதெனில் அந்த ஆண்டு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.175/'13

கௌரவ புத்திக பத்திரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறை தொடர்பில் பாடசாலை மாணவர்களின் அறிவை வளர்த்தல்,— இலங்கையின் எதிர்கால இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாகவும், மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும் பாடசாலை பாடத் திட்டத்தில் மோட்டார் வாகன தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.176/'13

கௌரவ புத்திக பத்திரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வியை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு கல்வியியற் கல்லூரியொன்றை தாபித்தல்,— இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கேற்ப மேற்படி துறையில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கேற்ற வகையில் பாடசாலை மட்டத்தில் அதனை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு மோட்டார் வாகன தொழில்நுட்பத்துறை தொடர்பாக கல்வியியற் கல்லூரியொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.177/'13

கௌரவ புத்திக்க பத்திரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்தல்,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் 25-30 வருடங்கள் பழமையான பாடத் திட்டங்களின் கீழேயே நடைபெறுவதால், அந்நிலைமையை மாற்றியமைக்கும் பொருட்டு மேற்படி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.178/'13

கௌரவ புத்திக பத்திரண,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிசெய்தல்,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த நேரடி மற்றும் மறைமுக தொழில்களில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டுள்ள இலங்கையில் வாழும் இளைஞர்கள், ஓய்வுபெற்ற முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் மூத்த பிரஜைகள் ஆகிய சமூக குழுக்களின் பொருளாதார பலத்தை மேம்படுத்துவதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்திக்கு அவர்களது பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் குறித்த துறையில் ஈடுபட்டுள்ளவர்களது முனைப்புடனான பங்களிப்பை தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.179/'13

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கை/சுதேச சமையற்கலை தொடர்பில் நாட்டினுள் மக்கள் மனப்பான்மைகளை வளர்த்தல்,— இலங்கை/சுதேச சமையற்கலை பற்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே அதிக ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நாட்டினுள் மக்களின் மனப்பான்மைகளை இதன்மீது செலுத்துவதற்காக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் பாடநெறியில் சமையற்கலையை ஒரு பாடமாக சேர்ப்பதற்கும், அரச மற்றும் தனியார் துறை தலையீட்டின் அடிப்படையில் ஆராய்ச்சித் துறைகளை ஊக்குவிப்பதன் ஊடாக புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளவும், இதனோடு தொடர்புடைய நிறுவன முறைமைகளை இணைத்து சான்றிதழ், டிப்ளோமா, பட்டம், பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை உருவாக்குவதன் மூலம் இத் துறை பற்றி மக்கள் மத்தியில் விரிவான விதத்தில் மனப்பான்மை ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.180/'13

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது சுவையூட்டல் மற்றும் கலவையாக்கல் கலை, சமையற்கலை, நிறமூட்டல், உணவு வெட்டுதல் உள்ளிட்ட பல பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் இதனோடு இணைந்துள்ள இலங்கையின் உணவுக் கலாசாரம் பற்றி கற்றல், கற்பித்தல் வழிமுறைகள் ஊடாக எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பதற்கும் அதேபோன்று உள்நாட்டு, வெளிநாட்டு மக்களிடையே எமது உணவுக் கலாசாரத்தை பரப்புவதன் ஊடாக இலங்கையின் தனித்துவத்தை சர்வதேச ரீதியாக மேலோங்கச் செய்வதற்குமான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

# 2013 மே 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2195/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) கடந்த ஐந்து வருடங்களில், ஒவ்வொரு வருடத்திற்குமான லங்கா புத்ர அபிவிருத்தி வங்கியின்,

(i) பயன்படுத்தப்பட்ட மொத்த மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(ii) உரிமை முதல் மீதான வருவாய் மற்றும் சொத்துக்கள் மீதான வருவாயையும்;

(iii) பணியாட்டொகுதியினரின் மொத்த எண்ணிக்கை மற்றும் ஒரு ஊழியருக்கான செலவையும்;

(iv) மேற்குறிப்பிட்ட தகவல்களை ஒரு தனியார் துறை வங்கி நிறுவனத்தோடு ஒப்பு நோக்கியும்;

(v) மீண்டெழா செலவினங்களையும்;

(vi) அரசாங்கத்திற்கு விதிப்பனவுகளாகவும் தீர்வைகளாகவும் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையையும்;

(vii) இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2220/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) மகிந்த சிந்தனை தொலைநோக்குக் கொள்கைகளில் "செமட நிவசக் - ஹிதட செவணக்" வேலைத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற தொடர்மாடி வீடுகள், மற்றும் அரசின் வேறு வீடமைப்புத் திட்டங்களில் வசிப்பவர்களை தமது வீட்டின் அறுதி உரிமையாளர்களுக்கும் வேலைத் திட்டத்தை மூன்று மாதங்களினுள் நிறைவு செய்வதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் முடிவடைந்த திகதி யாது என்பதையும்;

(ii) அந்த வேலைத்திட்டத்தின் கீழ் தமது வீட்டின் அறுதி உரிமையைப் பெற்ற நகர்ப்புற தொடர்மாடி வீடுகளில் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) அரசாங்கத்தின் வேறு வீடமைப்புத் திட்டங்களில் வாழும் மேற்கூறியவாறு வீடுகளுக்கான அறுதி உரிமையைப் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2273/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2011ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சை நடைபெற்ற திகதி யாதென்பதையும்;

(ii) இப்பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) வெளியிடப்பட்ட பெறுபேறுகளை செல்லுபடியற்றதாக்கிவிட்டு மீண்டும் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 உயர் தரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்படுகையில் ஏற்பட்ட சிக்கலான நிலைமைக்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

(ii) இவர்கள் தொடர்பாக மேற்கொள்ளவிருக்கும் அல்லது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) பெறுபேறுகள் திருத்தப்பட்டதனால் எதிர்பார்ப்புகள் நிறைவேறாது அசௌகரியத்துக்கு உள்ளான தரப்பினர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2344/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாசடைந்த சுற்றாடல் நிலைமைகள் காரணமாக மக்கள் நோய்வாய்ப்படுவதை தடுப்பதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் சுகாதார அமைச்சும் இணைந்து செயற்பட வேண்டுமென "மஹிந்த சிந்தனை தொலைநோக்கு" கொள்கைத் தொடரில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் செயற்படுவதற்குத் தேவையான கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கொள்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2471/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரத்தில் இடம்பெற்ற "தெயட்டகிருல" கண்காட்சிக்கு இணைந்ததாக தாபிக்கப்பட்ட விவசாய மேம்பாட்டுப் பண்ணைகளுக்காக செலவிடப்பட்ட தொகையையும்;

(ii) அப்பண்ணைகளால் கிடைக்கப்பெற்ற பயன்களையும்;

(iii) "தெயட்டகிருல" கண்காட்சிக்கு முன்னர் ஒயாமடுவ பண்ணைக்குச் சொந்தமாகவிருந்த 500 பசுக்கள் இப்போது எங்கே உள்ளன என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) "தெயட்டகிருல" கண்காட்சிக்குச் சமாந்தரமாக தாபிக்கப்பட்ட நிரந்தர நீர் வழங்கல் திட்டத்திற்காக செலவிட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அத்திட்டத்தால் "தெயட்டகிருல" முடிவடைந்த பின்னர் பயன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) ஒயாமடுவ - மனிஸ்ஸாகமுவ - தந்திரமலே புகையிரதச் சேவையை நடத்துவதற்கு ஏற்பட்ட செலவையும்;

(ii) அப்புகையிரதத்தினால் "தெயட்டகிருல" நடைபெற்ற 9 நாட்களிலும் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் பயன்களையும்;

(iii) மேற்கூறப்பட்ட புகையிரதச் சேவையை நடத்துவதற்காக தாபிக்கப்பட்ட பௌதீக கட்டுமானங்களை கழற்றி அகற்றுவதற்காக செலவிடப்பட்ட தொகையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2788/'12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 'லங்கா முதித்த' கப்பல் தற்போது விற்பனை செய்யப்பட்டு அல்லது குத்தகைக்கு விடப்பட்டு உள்ளதா;

(ii) விற்பனை செய்யப்பட்டு அல்லது குத்தகைக்கு விடப்பட்டிருப்பின், அத்திகதி யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) லங்கா முதித்த கப்பல் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட திகதி யாது;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட திகதிக்குப் பின்னர் குறித்த கப்பல் தரித்து வைக்கப்பட்டிருந்த இடம் யாது;

(iii) பாவனையிலிருந்து நீக்கியதன் பின்னர் குறித்த கப்பலுக்காக நாளொன்றுக்கு செலவழிக்கப்பட்ட பணத்தொகை யாது;

(iv) பாவனையிலிருந்து நீக்கிய தினத்திலிருந்து குறித்த கப்பலுக்காக செலவழிக்கப்பட்ட மொத்தப் பணத்தொகை யாது

(v) குறித்த கப்பலின் விற்பனை தாமதப்படுத்தப்படுவதற்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 மே 22, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2260/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2012 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம், பல்கலைக்கழக மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற மஹாபொல புலைமைப் பரிசில் தொகையை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2278/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உத்தேச களுகங்கை திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி திட்டத்தை ஆரம்பிப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நீர்ப்பாசன திட்டத்தில் அடங்குகின்ற மொத்த நிலப்பரப்பு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நிலப்பரப்பிலுள்ள விவசாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த காணிகளின் அளவு மற்றும் பயிரிடப்பட்டுள்ள விவசாய பயிர்கள் யாவையென்பதையும்;

(v) இதில் உள்ளடங்குகின்ற கிராமங்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி திட்டத்தினால் இடம்பெயர்கின்ற குடும்பங்கள் மற்றும் சனத்தொகை எவ்வளவென்பதையும்;

(vii) இத்திட்டத்தின் கீழ் அகற்றுவதற்கு நேரிடுகின்ற அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள்,விஹாரைகள் மற்றும் ஏனைய முக்கியமான இடங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டம் சம்பந்தமாக பெறப்பட்டுள்ள சுற்றாடல் சாத்தியக்கூற்றறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி திட்டம் செயற்படுத்தப்படுவதால் இடம்பெயரும் மக்களுக்காகவும் அவர்கள் இழக்கின்ற சொத்துகளுக்காகவும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) பொருளாதார ரீதியில் மிகவும் பெறுமதிமிக்க காணிகளை இழப்பதாலும் பெருமளவு மக்கள் இடம்பெயர்வதாலும் இத்திட்டத்தை நிறுத்துவதற்கோ அல்லது குறைந்த இழப்புகளுள்ள வேறு இடத்துக்கு எடுத்துச் செல்வதற்கோ நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2320/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012 சனவரி 15 ஆம் திகதி மரக்கறி கொண்டு செல்வதற்காக நடைமுறைப் படுத்தப்பட்ட கூடை முறைமை எவ்வாறு செயற்படுகின்றது என்பதையும்;

(ii) கூடை முறைமை அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் பழுதடையும் மரக்கறிகளை பாதுகாக்கும் நூற்றுவீதம் மற்றும் அதன் ரூபா பெறுமதி ஆகியவற்றையும்;

(iii) மேற்படி சேமிப்பு எவ்வாறு கணக்காய்வு செய்யப்படுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) கூடை முறைமையின் அமுல்படுத்தலின் காரணமாக மரக்கறி விலைகள் குறைந்துள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், ஒப்புறுதிப்படு சான்றுகளுடன் குறைக்கப்பட்ட விலை எவ்வளவு என்பதையும்;

(iii) கூடைகளை திரும்பவும் விவசாயிகளிடம் எடுத்துச் செல்லும் செலவினத்தைப் பொறுப்பேற்கும் ஆள் யார் என்பதையும்;

(iv) ஒரு வருடத்திற்கு விவசாயிகளிடம் கூடைகளைத் திரும்ப அனுப்பும் போக்குவரத்து செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2514/'12

கௌரவ சஜித் பிரேமதாச,— மீள் குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வட மாகாணத்தில் சம்பத்நுவர பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கஜபாபுரம் கிராமம் மீள்குடியமர்த்தல் வேலைத் திட்டத்தின் கீழ் உருவான ஒரு கிராமமாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி கிராமத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி கிராமத்தில் மீள்குடியமர்த்தப்பட் மக்களுக்கு அரசாங்க அனுசரணையுடன் வழங்கப்படும் சலுகைகள் யாவை;

(iii) மேற்படி சலுகைகளை ஒரு குடும்பத்துக்கு வழங்குவதற்காக அரசாங்கம் செலவிட்டுள்ள மொத்தப் பணத்தொகை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2718/ ’12

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக் கிரிக்கெட்டின் 2009, 2010, 2011 ஆண்டுகளிலும் 2012ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரையிலும் உள்ளவாறான காசு ஒதுக்கங்களையும்;

(ii) ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்தின் போதும் நிர்ணயிக்கப்பட்ட வருமானத்தினை இலங்கை கிரிக்கெட்டினால் அடைய முடியாமல் போயுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அச்சூழ்நிலைக்கான காரணத்தினையும்

அவர் கூறுவாரா?

(ஆ) கிரிக்கெட் போட்டிகளை ஒளிபரப்புச் செய்வதற்கான உரிமையை 2009, 2010, 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளின் போது விற்பனை செய்ததால் இலங்கை கிரிக்கெட்டிற்குக் கிடைத்த வருமானத்தினையும் அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2789/ ’12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு,

(i) ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) ஆலோசகர்கள் ஆட்சேர்க்கப்பட்ட திகதிகள் மற்றும் நீக்கப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்கூறப்பட்ட ஒவ்வொரு ஆலோசகரினதும்,

(i) கல்வித் தகைமைகள் மற்றும் தொழில் தகைமைகள்;

(ii) மாதாந்தம் செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளின் பெறுமதிகள்;

(iii) முந்திய சேவை நிறுவனங்கள்;

(iv) சேவைக் காலத்தில் கூட்டுத்தாபனத்திற்கு ஆற்றியுள்ள சேவை

தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2013 மே 23, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2279/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உள்ளூராட்சி நிறுவனங்களினால் நிருவகிக்கப்படுகின்ற நாடளாவிய ரீதியலுள்ள நூலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நூலகங்களில் நூலக உதவியாளர் பதவியில் கருமமாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களுக்கு வழங்கப்படுகின்ற மாதாந்த சம்பளம் அல்லது கொடுப்பனவுகள் யாதென்பதையும்;

(iv) அனுபவத்திற்கும் சேவைக்காலத்திற்கும் ஏற்ப அரச ஊழியர்களுக்கு உரித்துடைய பதவியுயர்வு வாய்ப்புகளும் ஓய்வூதிய உரித்துகளும் நூலக உதவியாளர் பதவிக்கும் உரித்துடையதாவென்பதையும்;

(v) மேற்படி பதவியுயர்வு வாய்ப்புகள் கிடைக்காவிடின் அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அனுபவம் மற்றும் சேவைக்காலம் ஆகியவற்றிற்கேற்ப அரச சேவையில் பெரும்பாலானவர்களுக்கு உரித்துடைய பதவியுயர்வு வாய்ப்புகள் நூலக உதவியாளர்களுக்கு கிடைக்காமை பாரிய அநீதியென்பதுடன் மனித உரிமை மீறலாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர்களுக்கு இந்த உரிமை எத்தேதியில் பெற்றுக்கொடுக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2340/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) "மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு" கொள்கைத் தொடர் மூலமாக சுகாதார அமைச்சில் பெண் நோய் தடுப்பு தொடர்பான தனி வேறான பிரிவொன்றை ஆரம்பிக்க வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) தற்போது மேற்படி பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2463/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) "வடக்கின் வசந்தம்" மற்றும் "கிழக்கின் உதயம்" ஆகியன தொடர்பாக 2010 ஆம், 2011 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில்,

(i) ஏற்பட்ட செலவு மற்றும் அடைந்த நன்மைகளையும்;

(ii) ஏற்படுத்தப்பட்ட தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கையையும்; மற்றும்

(iii) ஏற்பட்ட சரியான செலவையும் மற்றும் காசோட்டத்தினைக் கொண்டு செலவிடப்பட்ட முழுப் பணத்தொகைக்கான சான்றுகளையும்

ஆண்டு அடிப்படையில் வெவ்வேறாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2010 ஆம், 2011 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கான "வடக்கின் வசந்தம்" மற்றும் "கிழக்கின் உதயம்" ஆகியவற்றுக்காகப் பெறப்பட்ட மொத்த உதவிகளையும் கொடைகளையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2515/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தின் சம்பத்நுவர வைத்தியசாலையில் பல்வேறு பௌதீக, மனித வள பற்றாக்குறைகள் காணப்படுவதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் காணப்படும் பௌதீக, மனித வள பற்றாக்குறைகள், குறைபாடுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனின், இதற்காக எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2719/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 ஆம் மற்றும் 2012ஆம் ஆண்டுகளில்,

(i) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் புலனாய்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) விசாரணைகளின் பின்னர் குற்றப்பகர்வுகள் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) வழக்கு வாரியாக (அ)(ii)இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வழக்குத் தொடர்பாகவும் கூறப்பட்டுள்ள குற்றம், வழங்கப்பட்டுள்ள அபராதம் மற்றும் தண்டனை யாவையென்பதையும்;

(iv) கிடைக்கப்பெறும் வழக்கொன்றை முடிவுறுத்துவதற்கு முடிவுறுத்துவதற்கு மேற்படி ஆணைக்குழுவிற்குத் தேவைப்படும் சராசரி காலப்பகுதி யாதென்பதையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(ஆ) (i) கௌரவ விஜேதாஸ ராஜபக்ஷ பா.உ. அவர்களின் தலைமையின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கையின் பிரகாரம் மேற்படி ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள விடயங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி அறிக்கையின் விதப்புரைகளின் பிரகாரம் நடைமுறைப்படுத்திய நடவடிக்கை யாவையென்பதையும்;

(iii) மேற்படி அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய அறிக்கையில் தரப்பட்டுள்ள விதப்புரைகளுக்கு இணங்காமை மற்றும் மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளாமைக்கான காரணம் யாவையென்பதையும்;

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2790/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மஹாபொல கப்பல், வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளுக்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி கப்பல் வேறொரு நிறுவனத்திற்கு குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்கூறப்பட்ட கப்பல் குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருப்பின்,

(i) வழங்கப்பட்ட நிறுவனம்;

(ii) அவ்வாறு வழங்கிய திகதி;

(iii) குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் கடற்றொழிற்றுறை அனுபவம்;

(iv) மேற்படி நிறுவனத்தின் நிதிச் சொத்துக்கள்;

(v) மாதாந்தம் கிடைக்கும் குத்தகை அல்லது வாடகைப் பணத் தொகை;

(vi) தற்போது மேற்படி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் பணத் தொகை மற்றும் பெற வேண்டியுள்ள நிலுவைப் பணத் தொகை

தனித்தனியே யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 யூன் 04, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1947/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மாத்தறை மாவட்டத்தில் திஹகொட பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கபுதூவ நெசவுக் கைத்தொழில் நிலையக் கட்டடமும் அதன் உபகரணங்களும் தற்போது அழிவடைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அங்குள்ள வளங்களைப் பயன்படுத்தி மேற்படி பயிற்சி நிலையத்தை மீண்டும் சீரான நிலைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், அந்த இடத்தை வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையமொன்றுக்கு அல்லது வேறு ஏதேனும் அலுவலொன்றுக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2280/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அரச பாடசாலை ஆசிரியர்களின் தொழில்சார் அபிவிருத்தியை உருவாக்கும் பொருட்டு பயிற்சி நிலையங்கள் எந்த ஆண்டில் தாபிக்கப்பட்டதென்பதையும்;

(ii) நாடளாவிய ரீதியில் தாபிக்கப்பட்டுள்ள மேற்படி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து மேற்படி நிலையங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள முகாமையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி முகாமையாளர்கள் கல்வியலாளர்கள் சேவைக்கு உள்வாங்கப் பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் இற்றைவரை மேற்படி நிலையங்களின் மூலம் ஆசிரியர்களுக்கு தொழில்சார் பயிற்சியை பெற்றுக்கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள்;

(ii) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் இற்றைவரை மேற்படி நிலையங்களின் மூலமாக பயிற்சிகள் வழங்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை;

ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2356/ '12

கௌரவ.சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2008ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற "பத்து மாத சம்பள முற்பண" கடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கை வருட வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி விண்ணப்பங்களில் ஒவ்வொரு வருடத்திற்காகவும் செலுத்தப்பட்ட சம்பள முற்பண கடன்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அவசர பணத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக கோரப்படும் மேற்படி கடன் தொகையை செலுத்துவதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) 2011ஆம் ஆண்டு வரை கிடைக்கப்பெற்றுள்ளதும் இன்றுவரை செலுத்தப்படாதுள்ளதுமான சம்பள முற்பண கடன் விண்ணப்பங்களுக்குரிய கொடுப்பனவுகளை செலுத்தி முடிக்கும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2464/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2009ஆம், 2010 ஆம், 2011 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கான,

(i) அரசாங்கத்தால் கவனம் செலுத்தப்படும் பிரதான கைத்தொழில்களையும் (Thrust Industries);

(ii) மேற்குறிப்பிட்ட துறைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளை வருடாந்த அடிப்படையிலும்;

(iii) ஆண்டொன்றுக்கு அத்துறைகளில் ஏற்படுத்தப்பட்ட மேலதிக தொழில் வாய்ப்புக்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கு இதற்கு முன்னரும் தற்போதும் வழங்கப்பட்ட வரிச்சலுகைகள் மற்றும் ஊக்குவிப்புக்களையும்;

(ii) மேற்குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கு 2009 ஆம், 2010 ஆம், 2011 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் விதிக்கப்பட்ட வரிகளிலிருந்து பெறப்பட்ட மொத்த வருமானத்தினை வருடாந்த அடிப்படையிலும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2442/ '12

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் வெள்ளத் தடுப்புக் கருத்திட்டமான நில்வலா கங்கை திட்டத்தின் இரண்டாம் கட்டம் தற்போது செயற்படும் நிலையில் உள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அப் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நில்வலா கங்கை திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்கான நிதியை பெற்றுக்கொள்வது உள்நாட்டு நிதியங்களிலிருந்தா அல்லது வெளிநாட்டு நிதியங்களிலிருந்தா என்பதையும்;

(ii) அதற்கான நிதி ஏற்பாட்டை வழங்குகின்ற நிறுவனம் அல்லது நாடுகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் முலம் எதிர்பார்க்கப்படுகின்ற நலன்கள் கிடைக்கப் பெறுகின்ற விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2560/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006, 2007, 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் சுகாதாரத் துறைக்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை அந்த ஒவ்வொரு வருடத்தினதும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெவ்வேறாக எத்தனை சதவீதம் என்பதை அவர் குறிப்டுவாரா?

(ஆ) (i) மேற்கூறிய வருடங்களில் சுகாதாரத் துறைக்காக ஒதுக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மேற்கூறிய சதவீதங்கள் அந்தத் துறையின் அபிவிருத்திக்கு போதுமானதாக காணப்படவில்லை என்பதையும்;

(ii) தற்போதைய நிலைமையின்படி சுகாதாரத் துறையின் முன்னேற்றத்துக்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகையை விடக் கூடுதலான பணத்தொகை ஒதுக்கப்பட வேண்டும் என்பதையும்

ஏற்றுக் கொள்வாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2684/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சியின் எண்ணக்கருவை அவர் விளக்குவாரா?,

(ஆ) (i) இற்றை வரை ஒவ்வொரு தேசத்திற்கு மகுடம் கண்காட்சியிலும் ஏற்படுத்தப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட தொழில்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இத்தொழில்கள் நிரந்தரமானவையும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையனவுமா என்பதையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(இ) (i) அனுராதபுர தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கு உண்மையிலேயே எச்செலவுத் தலைப்பிலிருந்து பணம் செலவிடப்பட்டது என்பதையும்;

(ii) கடந்த தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்குத் தேவைப்பட்ட ஊழியம் மற்றும் சொத்துக்கள் போன்றவை எந்தவிதக் கொடுப்பனவுமின்றிப் பாவிக்கப்பட்டதா என்பதையும்; உதாரணமாக, ஆயுதப் படை ஆளணியினர் மற்றும் தொழிலாளர்கள் போன்றோரும், இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் போன்றவையும் செலவு ஆக்கக் கூறுகளாக மொத்த செலவுக் கணிப்பீட்டின் போது உள்ளடக்கப்பட்டிருந்தன.

(iii) இன்றேல், குறிப்பிட்ட கண்காட்சிக்கான செலவு எவ்வாறு கணிப்பிடப்பட்டது என்பதையும்;

(iv) எதிர்வரும் மூன்று தேசத்திற்கு மகுடம் கண்காட்சிகளுக்கும் ஏற்படுமென எதிர்பார்க்கின்ற செலவினைத் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2791/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பார?

(ஆ) தற்போது மேற்படி பயணிகள் கப்பல் சேவை,

(i) பேணிவரப்படுகின்றதா என்பதையும்;

(ii) பேணிவரப்படுவதில்லையெனின், அது நிறுத்தப்பட்டுள்ள காலப்பகுதி யாது என்பதையும்;

(iii) நிறுத்தப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு பேணிவரப்படுவதாயின், அக்காலப்பகுதி யாது என்பதையும்;

(iv) தற்போது பேணிவரப்படுவதில்லையெனின், மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி பயணிகள் கப்பல் சேவையை பேணிவருதல் தொடர்பாக,

(i) கொள்வனவு செய்யப்பட்டுள்ள அல்லது வாடகை/குத்தகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள சொத்துக்கள் யாவை என்பதையும்;

(ii) வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் கட்டடங்கள் பெறப்பட்டிருப்பின், அக்கட்டடங்கள் பெறப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) பெறப்பட்டுள்ள கட்டடங்களுக்கு மாதாந்தம் செலுத்தப்படுகின்ற பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கட்டடங்களுக்குரிய வாடகை ஒரே தடவையில் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) கட்டடங்களுக்கு ஒரே தடவையில் வாடகை செலுத்தப்பட்டுள்ள காலப்பகுதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2013 யூன் 05, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1955/ '11

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கா/பிரஜாபதி கோதமி மகளிர் கல்லூரிக்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் தனிப்பட்ட உரிமையாளரொருவர் அன்பளிப்பாக நல்கிய அம்பலன்கொடை விலேகொடையில் அமைந்துள்ள மூன்று மாடிவீடு, இதுவரை எந்தவித பயன்பாட்டுக்கும் எடுக்கப்படாது சேதத்திற்குள்ளாகி வருகின்றது என்பதையும்;

(ii) சேதமடைந்த நிலையில் காணப்படும் மேற்படி வீடு, பாடசாலையில் கல்வி பயிலும் மாணவிகளது உயிருக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்பதையும்;

(iii) மேற்படி கட்டிடத்தை இடித்தகற்றிவிட்டு, அந்த இடத்தில் கூட்ட மண்டபமொன்றை அமைத்துத் தருமாறு பாடசாலை அதிபர் பல தடவைகள் உரிய அதிகாரிகளிடம் வேண்டியுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாடசாலை அதிபரின் மேற்படி கோரிக்கைக்கு அமைய செயற்படும் பொருட்டு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2206/ '11

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தற்போதைய அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சுகளுக்கான 2012 ஆம் ஆண்டு மொத்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி ஒதுக்கீடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதத்தில் யாதென்பதையும்;

(iv) அந்த அமைச்சுகளில் வேலை செய்யும் ஆட்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்பதனையும்;

(v) மாதமொன்றுக்கு ஒரு அமைச்சுக்கான மொத்த செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) மேலே சொல்லப்பட்ட ஏதேனும் அமைச்சுகளை இல்லாதொழிக்கவோ அல்லது குறைக்கவோ முடியுமா என்பதையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2368/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மஹிந்த சிந்தனை 'இலங்கையை வெற்றிபெறச் செய்வோம்' கொள்கைத் தொடரின் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு பகல் உணவாக ஒரு வேளை சோறு இலவசமாக வழங்கப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதியின்படி அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பகல் உணவு கிடைக்கின்றதா என்பதையும்;

(ii) இன்றேல் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது பகல் உணவாக ஒரு வேளை சோறு வழங்கப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) பகல் உணவு வழங்குவதற்காக மேற்படி பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2373/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சிவில், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஸ்ரீலங்கன் எயார்லைன் கம்பனியின் நிகழ்கால தவிசாளர் யார் என்பதையும்;

(ii) இவரது கல்வி மற்றும் தொழில்வாண்மைத் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) இவரது சம்பளம் யாது என்பதையும்;

(iv) பிற படிகளைப் பெறுவாரெனில் அவை யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு படியினதும் பெறுமதிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஸ்ரீலங்கன் எயார்லைன் கம்பனியில் உள்ள பணிப்பாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பணிப்பாளரதும் கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்வாண்மைத் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு வழங்கப்படுகின்ற படிகளின் பெறுமதிகள் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஸ்ரீலங்கன் எயார்லைன் கம்பனியின் உப தவிசாளரோ அல்லது செயற்படு பணிப்பாளரோ உள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனில் இவரது கல்வி மற்றும் தொழில்வாண்மைத் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) இவருக்கு உரித்தான சம்பளம், ஊதியம் மற்றும் பிற படிகளின் பெறுமதிகள் யாவை என்பதையும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2455/ '12

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குளியாபிட்டிய பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டுபொத்த நகர மத்தியில் அமைந்துள்ள விஜயசிறி சமரசிங்க ஞாபகார்த்த நூலகம் புனரமைக்கப்படாமையினால் சுமார் 04 வருடங்களாக மூடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நூலகத்தை திருத்தியமைத்து வாசகர்களின் பாவனைக்காக திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) நூலக கட்டடத்தை புனரமைப்பதற்கு ஏற்கனவே நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2561/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் பெண்கள் பணியகத்தில் பெண்கள் மேம்பாட்டிற்காக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இந்த நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத் தொகை வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) ஒதுக்கப்பட்ட மேற்படி பணத்தொகைகளும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களும் பெண்களின் மேம்பாட்டிற்காக போதியளவு பங்களிப்பினை வழங்கியுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2792/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறுநீரக நோயாளிகளின் ஈமோகுளோபினைக் கட்டுப்படுத்துவதற்கு வழங்கப்படும் எரித்ரோபொய்டின் எனும் ஊசிமருந்து சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் அனைத்து அரச வைத்தியசாலைகளுக்கும் தட்டுப்பாடின்றி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இல்லையெனில், மேற்படி ஊசிமருந்து போதியளவில் வழங்கப்படாதுள்ள வைத்தியசாலைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலைகளுக்கு சம்பந்தப்பட்ட ஊசிமருந்து போதியளவில் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஊசிமருந்தின் சந்தை விலை எவ்வளவென்பதையும்;

(v) அரச வைத்தியசாலைகளுக்கு மேற்படி மருந்து வழங்கப்படவில்லை எனில், மேற்படி நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தல் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி சிறுநீரக நோய்க்கு எரித்ரோபொய்டின் எனப்படும் ஊசி மருந்துக்கு பதிலீடான மருந்துவகைகள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2817/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலிருந்து 350 மில்லியன் ரூபா பெறுமதியுடைய சோளம் ஏற்றுமதி செய்யப்பட்டது என 2012 மே 23ஆம் திகதி கூறப்பட்டதா என்பதையும்;

(ii) 2012 மே மாதத்திலிருந்து சோளத்தின் ஏற்றுமதி அளவை மாதாந்த அடிப்படையில் யாதென்பதையும்;

(iii) இலங்கையின் மொத்த சோள உற்பத்தியினை 2011 இலிருந்து இற்றைவரையில் வருடாந்த அடிப்படையில் யாதென்பதையும்;

(iv) சோளத்தின் உற்பத்திச் செலவு யாதென்பதையும்;

(v) இலங்கையில் அதிகளவில் சோளம் பயிரிடப்படும் பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(vi) இலங்கை சோளம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் யாவையென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2013 யூன் 06, வியாழக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1965/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) காலி மாவட்டத்தின் நாகொட பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள மலாமுர கால்வாய்க்கு குறுக்காக பாலமொன்றை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ள போதிலும், இது வரை அதன் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணிப்புப் பணிகள் இடையில் நிறுத்தப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) பிரதேச மக்களின் போக்குவரத்து வசதிக்காக மேற்படி பாலத்தை துரிதமாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மலாமுர கால்வாயின் குறுக்காக பாலத்தை அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) நிதி ஒதுக்கப்பட்டிருப்பின், மேற்படி பாலத்தின் அமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2365/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1987ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க கமக்காரார் ஓய்வூதிய சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கமக்காரார் ஓய்வூதியத் திட்டத்திற்கு கமக்காரார் பங்களிப்புச் செய்வதை ஆரம்பித்த வருடம் யாதென்பதையும்;

(ii) தற்போதும் இத்திட்டத்திற்கு கமக்காரார்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஓய்வூதியத்திற்கான பங்களிப்பைப் பெற்ற கமக்காரார்களிடம் இன்றுவரை அறவிடப்பட்டுள்ள மொத்தப் பங்களிப்புத் தொகை யாதென்பதையும்;

(ii) 60 வலயத்தைத் தாண்டி இதுவரை ஓய்வுபெற்றுள்ள கமக்காரார்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஓய்வுபெற்ற கமக்காரர் ஒருவருக்கு மாதாந்தம் செலுத்தப்படும் ஆகக்குறைந்த ஓய்வூதியத் தொகை யாதென்பதையும்;

(iv) 2011 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் செலுத்தப்பட்ட மொத்த ஓய்வூதியத் தொகை யாதென்பதையும்;

(v) கமக்காரர்களுக்கான ஓய்வூதியம் வழங்கல் மாதாந்தம் நடைபெறாவிடின் இதனை அவ்வாறு செயற்படுத்தும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2386/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்குள் மனித உரிமைகள் மீறப்படல் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எத்தனை முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்பதையும்;

(ii) அவற்றில் புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) புலனாய்வு செய்யப்பட உள்ள முறைப்பாடுகள் அதே ஆண்டில் புலனாய்வு செய்யப்படாமைக்கான காரணம் என்ன என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட காலப்பகுதிக்குள் மனித உரிமைகள் மீறப்பட்டதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு நிறுவனங்கள் தொடர்பாக கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) இதன்படி ஆகக் கூடிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2819/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கைக்கு வருகை தருகின்ற விமானங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய விமான சேவைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அவை நிலையானவையா அல்லது வாடகைக்கு அமர்த்தப்பட்டவையா என்பதையும்;

(iv) அவர்கள் விமானச் சேவை நடவடிக்கைகளுக்காக ஆறாவது சுயாதீனப் போக்குவரத்து அனுமதியை (sixth freedom traffic), அதாவது வேறு இரண்டு நாடுகளுக்கிடையே சேவை வழங்கும் போது தமது நாட்டிலும் தரித்து நின்று மீண்டும் பறக்கின்ற அனுமதியை, பெற்றுள்ளனரா என்பதையும்;

(v) இச்சகல விமான சேவைகளினாலும் ஒரு மாதத்திற்கு ஏற்படக்கூடிய மொத்தப் பயணிகளையும்;

(vi) கடந்த வருடத்தில் உல்லாசப் பயணிகளின் மொத்த வருகைகள் யாதென்பதையும்;

(vii) உல்லாசப் பயணிகளின் வருகையின் இலக்கினை அடைவதற்கு இவ்விமானச் சேவைகள் எவ்வாறு உதவும் என்பதையும்

(ஆ) இன்றேல், ஏன்?

2456/ '12

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கட்டுவன பிரதேச சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற மித்தெனிய பொதுச் சந்தையைப் பேணிவருவதற்கான புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு சுமார் இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதிலும், இன்றுவரை அது திறந்து வைக்கப்படவில்லை என்பதையும்;

(ii) தற்போது தனியார் காணியொன்றில் குத்தகை அடிப்படையில் மேற்படி சந்தை பேணிவரப்படுகின்றதென்பதையும்;

(iii) ஆகவே, பொது மக்களின் பணம் விரயமாகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மித்தெனிய பொதுச் சந்தையை புதிய இடத்துக்கு கொண்டு செல்வதில் உள்ள தடைகள் யாவையென்பதையும்;

(ii) அவ்வாறான தடைகளை நீக்கி பொதுச் சந்தையைப் பேணிவருவதற்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தை திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2562/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள பல்வேறான உள்ளூராட்சி நிறுவனங்களிலும் பணியாற்றுகின்ற மக்கள் பிரதிநிதிகளுக்கு மாதாந்தம் கிடைக்கும் சம்பளம் யாதென்பதையும்;

(ii) மேற்படி மக்கள் பிரதிநிதிகளுக்கு போதியளவு சம்பளம் கிடைக்கின்றதா என்பதையும்;

(iii) உள்ளூராட்சி நிறுவனங்களில் பணியாற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு மக்கள் சேவைகளை நிறைவேற்றும் பொருட்டு வழங்கப்படும் வசதிகளும் கொடுப்பனவுகளும் யாவை என்பதையும்;

(iv) போற்றத்தக்க விதத்தில் மக்கள் சேவையினை வழங்குவதற்கு குறித்த வசதிகளும் கொடுப்பனவுகளும் போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2794/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவரது மாதாந்த சம்பளம் 2006ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மாற்றமடைந்துள்ள விதம் யாதென்பதையும்;

(ii) இலங்கை துறைமுக அதிகார சபையின் தற்போதைய தலைவர் மேற்படி பதவிக்கு மேலதிகமாக வகிக்கும் ஏனைய பதவிகள் அல்லது பதவி யாதென்பதையும்;

(iii) மேற்படி பதவிகளை அல்லது பதவியை வகிப்பதற்காக மாதாந்தம் அவருக்கு கிடைக்கின்ற சம்பளங்கள், கொடுப்பனவுகள் அல்லது வேறு வசதிகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி பதவி அல்லது பதவிகள் கிடைக்கப்பெற்ற திகதி முதல் இதுவரை அவற்றுக்கு ஏற்புடையதாக கிடைக்கின்ற சம்பளங்கள், கொடுப்பனவுகள் அல்லது வேறு வசதிகள் மாற்றமடைந்துள்ள விதம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2823/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றுள்ளவாராக தொலைபேசி உரையாடல்களை இடைமறித்துத் தகவல்களை அறிந்து கொள்வது இலங்கையில் சட்டபூர்வமானதா என்பதையும்;

(ii) இவ்வாறு தொலைபேசி உரையாடல்களை இடைமறித்துத் தகவல்களைப் பெறுவது கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அது மேற்கொள்ளப்பட்ட காலப் பகுதியினையும்;

(iv) கடப்பாடுகள் தீவிர நுண்ணாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள பெயர்களையும்;

(v) நபரொருவரின் அடிப்படை உரிமையில் தலையிடுகின்றதான தொலைபேசி உரையாடலை இடைமறித்துத் தகவல்களைப் பெறுகின்றமைக்கு அதிகாரமளிக்கக் கூடிய ஆளையும்;

(vi) தொலைபேசி உரையாடல் இடைமறிக்கப்பட்டு தகவல்கள் அறிந்து கொள்ளப்பட்ட அரசியல்வாதிகளின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2013 யூன் 07, வெள்ளிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2411/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012.02.11ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்ததொரு திகதியில் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலையேற்றம் காரணமாக அசௌகரியத்திற்குள்ளான வாடகை முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இம் முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு எரிபொருள் நிவாரண உதவியொன்று வழங்கப்படுமா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் அது வழங்கப்படும் முறையியல் யாது என்பதையும்;

(iv) இந் நிவாரண உதவி வழங்கப்படும் கால எல்லை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வாடகை முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு எரிபொருள் நிவாரண உதவி வழங்கப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) நாட்டுக்கு சுமையாகாமல் சுயதொழில் ஈடுபட்டு சமூகத்துக்கும் சேவை வழங்கி வரும் இப்பிரிவினருக்கு நிவாரணம் வழங்காமை பெரும் அநீதி அல்லவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2457/ '12

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைக்கு நான்கு வருடங்களுக்கு முன்னர் அடிக்கல் நாட்டப்பட்டு நிர்மாணப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட மாத்தறை மாவட்டத்தின் அத்துரலிய பிரதேச சபை அலுவலக கட்டிடத்ததின் நிர்மாணப்பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இதற்காக நிதி ஏற்பாடுகளை வழங்கிய நிறுவனம் யாதென்பதையும்;

(iii) நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருப்பின், நிர்மாணப் பணிகளை நிறுத்தியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அதன் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படுமாயின் எத்திகதியில் என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2563/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகளிர் தொடர்பான தேசிய குழுவினால் பெண்களின் முன்னேற்றம் கருதி நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) ஒதுக்கப்பட்ட மேற்படி பணத் தொகையைச் செலவிட்டு நடைமுறைப்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் பெண்களின் முன்னேற்றத்திற்குப் போதியளவு சேவைகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2825/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அரச துறையில் உருவாக்கப்பட்டுள்ள வேலைவாய்ப்புக்களின் எண்ணிக்கையையும்;

(ii) 2007, 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறிய பட்டதாரிகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(iii) நாட்டில் தற்போதுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கையையும்;

(iv) அரச துறையிலுள்ள பட்டதாரியொருவருக்கு வழங்கும் சராசரி சம்பளத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2458/ '12

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அக்குரஸ்ஸ மாவட்ட வைத்தியசாலையில் குழாய் நீர் வழங்கல் முறையும் நீர்த்தாங்கியும் போதியதாயில்லாமையினால் நோயாளர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள் என்பதையும்;

(ii) வைத்தியசாலையில் நோயாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தமையைத் தொடர்ந்து மேற்படி பிரச்சினை மேலும் அதிகரித்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அக்குரஸ்ஸ வைத்தியசாலைக்கு போதியளவு நீர் வசதியை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இதற்கேற்ப தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி வைத்தியசாலையின் நீர் வசதிகளை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2564/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொட்டாவ, மத்தேகொட வீடமைப்புத் திட்டத்தில் குடியிருப்பவர்களின் நன்மை கருதி ஒதுக்கப்பட்டிருந்த மரம் செடிகொடிகளைக் கொண்டிருந்த நிலப் பரப்பில் அரைவாசிக்கும் மேற்பட்ட பிரதேசத்தில் காணப்பட்ட மரங்களை அகற்றி புதிய நிர்மாணமொன்றுக்கென கொங்கிறீட் இட்டுள்ள நிறுவனம் அல்லது கம்பனி யாதென்பதையும்;

(ii) மேற்படி வீடமைப்புத் திட்டத்தில் காணப்பட்ட பொது குளியல் கிணற்றுடன் கூடிய காணித்துண்டைச் சுற்றி தகர வேலியொன்றை அமைத்து, குடியிருப்பாளர்கள் அந்தக் கிணற்றைப் பயன்படுத்துவதைத் தடுத்துள்ளவர்கள் யாவர் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வீடமைப்புத் திட்டத்தில் வீதிகளை உரிய முறையில் பராமரிக்காது, அப்பணிகள் ஹோமாகம பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) அங்கு அமைக்கப்பட்டுள்ள நிலக்கீழ் நீர்த்தாங்கி ஏன் உரிய முறையில் பராமரிக்கப்படுவதில்லை என்பதையும்;

(iii) வீடமைப்புத் திட்டத்தின் அனைத்து வருமானங்களையும் ஈட்டிக்கொள்ளும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை குடியிருப்பாளர்களின் சேமநலன் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளாது அங்கு புதிய நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கு ஏன் தயாராகிறது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2795/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் புகையிரதப் பாதைகளை ஊடறுத்துச் செல்ல வேண்டியுள்ள குறுக்குப் பாதைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி குறுக்குப் பாதைகளில் அதிகளவிலான பயணிகள் தினசரி பயணம் செய்கின்ற குறுக்குப் பாதைகளாக இனங்காணப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி குறுக்குப் பாதைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள புகையிரதக் கடவைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை பாதுகாப்பற்ற புகையிரதக் குறுக்குப் பாதைகளில் இடம்பெற்றுள்ள விபத்துக்களின் எண்ணிக்கை, மரணங்களின் எண்ணிக்கை வருடரீதியில் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அத்தகைய விபத்துக்களின் மூலம் இடம்பெற்றுள்ள சொத்துச் சேதங்களின் பெறுமதி வருடரீதியில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) புகையிரதக் கடவையொன்றைப் பொருத்துவதற்காக செலவாகும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) புகையிரதக் கடவையொன்றில் பணியாற்றும் ஒருவருக்கு மாதாந்தம் செலுத்தப்படும் சம்பளம் அல்லது கொடுப்பனவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2826/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரைக்கும் வருடாந்த அடிப்படையில்—

(i) முப்படைகளிலிருந்தும் இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையையும்;

(ii) இராணுவத்தில் பிரிகேடியர் தரத்திலுள்ள பாதுகாப்பு அதிகாரிகள் அல்லது அதற்கு சமனான கடற்படை மற்றும் விமானப்படையிலுள்ள அதிகாரிகளில் இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்களின் பெயர்களையும் அவர்களுக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றங்களையும்;

(iii) அந்த அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்ட தண்டனைக் காலத்தை வெவ்வேறாகவும்

அவர் சபைக்குத் தெரிவிப்பரா?

(ஆ) (i) தற்போதுள்ள நீதிமன்ற முறைமை இராணுவ நீதிமன்றத்தை அங்கீகரித்துள்ளதா என்பதனையும்;

(ii) அவ்வாறாயின் இராணுவ நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனையை இரத்துச் செய்வதற்கான சாத்தியம் உண்டா என்பதனையும்;

(iii) இராணுவ நீதிமன்றத்தின் தீர்மானங்களை தள்ளுபடி செய்வதற்கு அதிகாரமுடைய ஆளையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2013 யூன் 18, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2415/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) "இலங்கை அபிவிருத்தி சேவை" என்ற பெயரில் அரச தொழில் வழங்கும் வேலைத்திட்டமொன்று நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அதன் கீழ் சேர்க்கப்படும் விண்ணப்பதாரிகளின் குறைந்தபட்ச தகமைகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு நிரந்தரமானதும் ஓய்வூதியம் உள்ளதுமான பதவிகள் வழங்கப்படுமா என்பதையும்;

(iv) அந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் நடைமுறை யாது என்பதையும்;

(v) சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைச் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(vi) இவர்களுக்கு ஒப்படைக்கப்படும் கடமைப் பொறுப்புக்கள் யாவை என்பதையும்;

(vii) இதன் கீழ் ஆட்சேர்க்கப்படும் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(viii) அரச சேவையில் வெற்றிடங்கள் பெருமளவில் நிலவும் போது அந்த வெற்றிடங்களை நிரப்பாமல் இச் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2521/ '12

கௌரவ புத்திக பதிரண,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1978 முதல் 2005 ஒக்டோபர் வரை நியமிக்கப்பட்ட நிறைவேற்றதிகாரமுடைய சனாதிபதிகள் வழங்கியுள்ள சனாதிபதியின் பொதுமன்னிப்பு முறைமையின் கீழ் சிறைத் தண்டனைகளிலிருந்து விடுதலைசெய்யப்பட்வர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவ்வாறு விடுதலை பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

ஆண்டு ரீதியில் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2566/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பெந்தர ஆற்றின் இடது கரை மற்றும் வலது கரைக் கருத்திட்டங்களுக்குச் சொந்தமான பெருமளவிலான வயற்காணிகள் பாழடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) “பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்” என்ற வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி வயற்காணிகளில் மீண்டும் பயிரிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மீள் பயிரிடும் வேலைத் திட்டத்தின் பின்னர் மேற்படி வயற்காணிகளில் விளைச்சல் அதிகரித்துள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பெந்தர ஆற்றின் ஊடாக பெருக்கெடுக்கும் கடல் நீர் காரணமாக மேற்படி வயற்காணிகள் அழிந்து வருவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) கடல் நீர் வயற்காணிகளுக்கு பெருக்கெடுப்பதைத் தடுப்பதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2828/ ’12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 முதல் 20011 வரை இலங்கையில் பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ள சீனத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையிலும்;

(ii) சீன நாட்டவர்களுக்கு வீசா தேவைப்பாடுகளில் அத்தகைய மிகுந்த அதிகரிப்பு ஏற்படுவதற்கான காரணத்தையும்;

(iii) நாட்டிலே பெருமளவிலான வேலைவாய்ப்பின்மை உள்ளபொழுது பெரும் எண்ணிக்கையிலான சீனத் தொழிலாளர்களை வைத்திருப்பது எவ்வாறு நியாயப்படுத்தப்படும் என்பதனையும்;

(iv) பெரும் எண்ணிக்கையிலான சீனத்தொழிலாளர்களுக்குத் தொழில் வழங்குவதற்கான அனுமதியை அங்கீகரிப்பதனால் நாட்டிற்கு ஏற்படும் வருமான இழப்பையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2522/ ’12

கௌரவ புத்திக பத்திரண,— சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்திற்காக 2011ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்டதின் மூலம் ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) ஒதுக்கப்பட்ட பணத்தில் செலவுசெய்யப்பட்ட உண்மையான செலவுகள் எவ்வளவென்பதையும்;

(iii) 2012 வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் மேற்படி நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் திறைசேறி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புகளில் பணத்தை முதலீடு செய்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இவ்வாறு முதலீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர், குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2568/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— துறைமுக, நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுரலியவில் இருந்து ஹெடிகல்ல வரையான வழியில் தொடங்குகின்ற மெல்லகஹவில தொடக்கம் நெலுவ வரையான வீதி பல வருடங்களாக சிதைவடைந்துள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வீதியானது பாடசாலைகள், அறநெறிப்பாடசாலைகள், அரசாங்க அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்குச் செல்வதற்காக பெரிதும் பாவிக்கப்படுகின்ற வீதியென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியானது பல வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2796/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கனேவத்த பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தின் தொஸ்தரவத்த எனப்படும் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மணல் அகழ்வு ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) இதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களிலிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மணல் அகழ்வை மேற்கொள்பவரின் பெயர் யாதென்பதையும்;

(iv) இதற்காகப் பயன்படுத்தப்படும் இயந்திர சாதனங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட மணல் அகழ்வுக்கு ஏற்புடையதான சுற்றாடல் சாத்திய வள அறிக்கையையும் புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் அறிக்கையையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி இடத்திலிருந்து நாள் ஒன்றுக்கு அகழ்வதற்கு விதந்துரைக்கப்பட்டுள்ள மணல் கியூப்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி மணல் அகழ்வுக்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரத்தின் கால எல்லை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) தொஸ்தரவத்த எனப்படும் இடத்தில் மேற்கொள்ளப்படுகின்றதான மணல் அகழ்வு காரணமாக பாரிய சுற்றாடல் அழிவு இடம்பெறுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இதுவரை அங்கு இடம்பெற்றுள்ள சுற்றாடல் அழிவு சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2857/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 ஆம் அண்டில்,

(ஆ) (i) இலங்கை மத்திய வங்கியின் மூலம் அரசாங்கத்தினால் பேணப்பட்ட மொத்த தங்க ஒதுக்கம் எவ்வளவு என்பதையும்;

(ii) அரசாங்கத்தினால் விற்பனை செய்யப்பட்ட தங்கத்தின் அளவு யாதென்பதையும்;

(iii) அவை விற்பனை செய்யப்பட்ட விலை யாதென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட தங்கத்தைக் கொள்வனவு செய்த தரப்பினர் யாவர் என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) அரசாங்கத்தினால் பேணப்பட வேண்டிய மொத்த தங்கத்தின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட அளவுத் தங்கத்தின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) அத்தகைய தங்கம் அரசாங்கத்தினால் எவ்வாறு சேகரிக்கப்பட்டது என்பதையும்;

(iv) 2012 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தங்க ஒதுக்கங்கள் எவ்வாறு தளம்பலுக்குள்ளானது என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) இலங்கை அரசாங்கத்தினால் பேணப்பட்ட வெளிநாட்டு தங்க ஒதுக்கங்களின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட வெளிநாட்டு தங்க ஒதுக்கங்களின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) வெளிநாட்டு தங்க ஒதுக்கங்களிலிருந்து விற்பனை செய்யப்பட்ட அளவு யாதென்பதையும்;

(iv) தங்கத்தை விற்பனை செய்ய அல்லது அதனை வைத்திருப்பது தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்ளும் நபர் யாரென்பதையும்

அவர் கூறுவாரா

(ஈ) இன்றேல் ஏன்?

# 2013 யூன் 19, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2487/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வத்தளை பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்திலுள்ள முத்துராஜவெல ஈர நிலத்திற்குரிய காணித்துண்டொன்றை, விற்பதற்கு, குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இக்காணியின் பரப்பளவு யாது என்பதையும்;

(iii) முத்துராஜவெல ஈர நிலத்திற்குரிய காணிகள் தொடர்பாக இவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்கு உரிய நிறுவனங்களிலிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இவ்வனுமதியை வழங்கிய உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்;

(v) குறிப்பிட்ட அனுமதி பெறுதல் தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே (அ)(i) இன் பிரகாரம் காணி வழங்கல் நடைபெற்றிருப்பின் இக்காணிகளைப் பெற்றவர்களின் முழுப்பெயர் மற்றும் முகவரிகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) முத்துராஜவெல ஈர நிலத்துக்குச் சொந்தமான காணிகள் தொடர்பாக மேற் குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுத்தலானது தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தை மீறுவதாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2570/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முதலாவது பாராளுமன்றத்திலிருந்து ஏழாவது பாராளுமன்றம் வரையிலான ஒவ்வொரு பாராளுமன்றத்தினதும் பெண்கள் பிரதிநிதித்துவம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பெண்கள் பிரதிநிதித்துவமும், சம்பந்தப்பட்ட பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினரர்களின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதமென்பதை வெவ்வேறாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) நாட்டின் தற்போதைய பெண்கள் சனத்தொகையின் சதவீதத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தில் நியாயமான பிரிதிநிதித்துவம் கிடைக்கின்றதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2700/ '12

கௌரவ புத்திக பதிரண,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றவர்களுக்கு அவர்கள் ஈட்டுகின்ற வருமானத்தில் இருந்து அமெரிக்க டொலர் 20,000 பணத்தொகையை இலங்கையின் வங்கியொன்றில் வைப்புச் செய்த பின்னர் தீர்வை வரிச் சலுகையின் கீழ் மோட்டார் வாகனமொன்றை இந்நாட்டுக்கு இறக்குமதி செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) மேற்படி வசதிகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிட்டுள்ளவாறு தீர்வை வரிச் சலுகையின் கீழ் வாகனமொன்றை இறக்குமதி செய்ய நிலவிய வசதிகளை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எப்போது என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2859/'12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) (i) 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட, செலஸ்ரியல் டவர்ஸ் (செலிங்கோ முதலீட்டு கம்பனிக் குழுமம்) தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மீள்நிர்மாணம் பற்றியும்;

(ii) சொல்லப்பட்ட ஆதனம் விஸ்தரிப்பு மற்றும் மேம்பாட்டுக்காக எவரேனும் முதலீட்டாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், முதலீட்டாளரின் பெயர்களையும், சம்பந்தப்பட்ட கம்பனியின் பணிப்பாளர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) புதிய முதலீட்டாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள மேற்கூறிய ஆதனத்துக்கான மொத்த முதலீட்டையும்;

(ii) அதே ஆதனத்தை மேம்படுத்த, பிற முதலீட்டாளர்களினால் ரூபா 6.8 பில்லியன் மற்றும் ரூபா 8.5 பில்லியனிற்கான பிரேரணைகளைப் பற்றி அதிகாரிகள் அறிவார்களா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) இன்றுள்ளவாறு இந்த ஆதனத்துக்குப் பொறுப்பான தகுதிவாய்ந்த அதிகாரிகளையும்;

(ii) அரசாங்கத்தினால் இத்தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்கு செலுத்தப்படும் மாதாந்த ஊதியத்தையும்;

(iii) மேற்கூறிய தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்குச் செலுத்தப்படும் மொத்த ஊதியத்தையும் படிகளையும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

2571/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முதலாவது பாராளுமன்றத்திலிருந்து ஏழாவது பாராளுமன்றம் வரை ஒவ்வொரு பாராளுமன்றத்திலுமிருந்த அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இந்த ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்த பெண் அமைச்சர்களின் எண்ணிக்கை, மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நாட்டின் தற்போதைய பெண்கள் சனத்தொகையின் சதவீதத்திற்கேற்ப பெண்களுக்கு நியாயமானதொரு பிரதிநிதித்துவம் அமைச்சரவையில் கிடைத்துள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2701/ '12

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை, அக்குரஸ்ஸ, திப்பொடுவாவ, "சொமிகெலுமில்" வசிக்கும் திரு. பி.ஜீ.பீ. அசோக 2011.03.14 ஆம் திகதி இரவு நடன நிகழ்ச்சியொன்றைப் பார்ப்பதற்காக திப்பொடுவாவ கடைவீதிக்கு சென்றிருந்த வேளை மரணமடைந்துள்ளாரென்பதையும்;

(ii) மறுநாள் பலகாவல மதகொன்றின் கீழ் இருந்து இவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ள போதிலும் இம்மரணம் தொடர்பான முறையான விசாரணையை அக்குரஸ்ஸ பொலீசார் மேற்கொள்ளவில்லை என இறந்தவரின் மனைவி குற்றம் சாட்டுகின்றார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு.அசோகவின் மரணம் தொடர்பாக முறையான விசாரணையை நடாத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் இவ்விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2797/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரையிலான காலப் பகுதியில் புதையல்கள் தோண்டப்பட்டதாக அறியவந்துள்ள இடங்களின் எண்ணிக்கை வருட ரீதியில் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி இடங்களில் தொல்பொருளியல் பெறுமதி கொண்ட இடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) புதையல் தோண்டிய குற்றச்சாட்டின் அடிப்படையில் இதுவரை கைது செய்யப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) புதையல் தோண்டல் சம்பந்தமாக இதுவரை கைது செய்யப்பட்டுள்ள தொல்பொருளியல் பெறுமதியுடன்கூடிய பொருட்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி தொல்பொருட்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் புதையல் தோண்டுவதற்காக அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள, ஆயினும் அது சம்பந்தமாக ஒருவரும் கைதுசெய்யப்படாதுள்ள தொல்பொருளியல் சார்ந்த இடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த இடங்கள் யாவையென்பதையும்;

(iii) பெறுமதிமிக்க தொல்பொருட்கள் புதைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்ற தொல்பொருளியல் சார்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்காக தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iv) இது தொடர்பாக எடுக்கப்படும் எதிர்கால நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2869/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிவில், விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) கெத்தே பசிபிக் நிறுவனத்திடமிருந்து ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வானூர்திகள் தொடர்பாக அவற்றின்,

(i) எண்ணிக்கையையும்;

(ii) அவை எவ்வளவு பழைமையானவை என்பதையும்;

(iii) குத்தகைக் காலம் மற்றும் செலுத்தப்பட்ட விலையையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(ஆ) (i) மேற்சொன்ன கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய பேச்சுவார்த்தைகளில் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸின் தலைவர் சம்பந்தப்பட்டிருந்தாரா என்பதையும்;

(ii) இந்த பல மில்லியன் ரூபா சம்பந்தப்பட்ட இக் கொடுக்கல் வாங்கல் பத்திரிகைகளில் அல்லது இணையத்தளங்களில் விளம்பரப்படுத்தப்பட்டதா என்பதையும்;

(iii) போட்டி விலைமனுக்கள் கிடைக்கப் பெற்றனவா என்பதையும்

(iv) இக்கொடுக்கல் வாங்கல் கெத்தே பசிபிக் நிறுவனத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) உயர் குத்தகைக் கட்டணத்தினால் ஏற்பட்ட பாரிய நட்டத்தின் காரணமாக கெத்தே பசிபிக் நிறுவனத்துடனான குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கையையும் ;

(ii) மேற்படி குத்தகையில் உள்நாட்டு முகவர் மற்றும் கெத்தே பசிபிக் நிறுவனத்துக்கான உள்நாட்டு முகவரின் பெயர்களை வெவ்வேறாகவும்;

(iii) மேற்சொன்ன குத்தகை முகவர் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸின் பணிப்பாளர் ஒருவரின் புதல்வரா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

## 2013 யூன் 20, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2575/ '12

கௌரவ *சஜித் பிரேமதாச*,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திவிநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடங்குகின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்து திவிநெகும நிகழ்ச்சித் திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் பயனாளிகள் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) திவிநெகும நிகழ்ச்சித் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை மில்லியன்களில் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்குகள் யாவையென்பதையும்;

(iii) தற்போது மேற்படி இலக்குகளில் எவ்வளவு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2703/ '12

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கிவருகின்ற பிரிவேனாக்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்களுக்கு அரசாங்க பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற இலவச புகையிரத பயணச் சீட்டு, குறைந்த வட்டியில் வழங்கப்படும் ஆதனக் கடன் மற்றும் இடர் கடன் ஆகியன வழங்கப்படுவதில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) சமனான சேவையை நிறைவேற்றும் ஆசிரியர்களுக்கு மேற்குறிப்பிட்டுள்ளவாறு இரண்டு விதத்தில் கவனித்தல் நியாயமானதல்ல என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில் , மேற்படி நிலைமையை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2799/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் கிரிகெட் போட்டிகளை ஒளிபரப்பும் உரிமை வழங்கப்பட்டுள்ள தொலைக்காட்சி அலைவரிசை யாது என்பதையும்;

(ii) அந்த உரிமை கையளிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(iii) கையளிக்கப்பட்ட ஒளிபரப்பு உரிமை செல்லுபடியாகும் கால எல்லை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறிய நிறுவனத்துக்கு கிரிகெட் போட்டிகளை ஒளிபரப்பும் உரிமையை வழங்குதல் அங்கீகரிக்கப்பட்ட முறைக்கமைய விலைமனுக்கள் கோரப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அதற்காக விலை மனுக்களை சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) கிரிகெட் போட்டிகளின் ஒளிபரப்பு உரிமையை வழங்குவதற்காக மேற்கூறிய நிறுவனத்தினால் இலங்கை கிரிகெட் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2887/'12

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் அதிமேதகு சனாதிபதி, கௌரவ அமைச்சர்கள், பிரதான அலுவலர்கள் ஆகியோர் ஐக்கிய இராச்சியம், இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளும் பொது அவர்களுக்கெதிராக பல எதிர்ப்பார்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அத்தகைய நிகழ்வுகளை நிறுத்துவதற்கு மேற்சொன்ன நாடுகளில் உள்ள இலங்கைத் தூதராலயங்களையும் உயர் ஸ்தானிகராலயங்களையும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் உபயோகிக்க முடியாமலிருக்கிறதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) அத்தகைய தர்ம சங்கடமான நிகழ்வுகளுக்காக மேற்சொன்ன நாடுகள் இலங்கையரிடம் மன்னிப்புக் கோரியுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனில் அது எங்கே, எப்போது, யாரால் மேற்கொள்ளப்பட்டது என்பதையும்;

(iii) இலங்கை உயர் ஸ்தானிகராலயங்களும் தூதராலயங்களும் சாத்தியமான பிரச்சினைகளை எதிர்பார்த்தனவா என்பதையும் சம்பந்தப்பட்ட நாடுகளின் குறித்த சில பகுதிகளில் அதிகரித்துவரும் கருத்து வேறுபாட்டினால் ஏற்படும் உட்பிளவுகள் மற்றும் அதனால் இலங்கைப் பிரதிநிதிகள் முகம்கொடுக்கவேண்டியுள்ள ஏதாவது தர்மசங்கடமான நிகழ்வுகளைத் தவிர்ப்பதற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளமை பற்றி இலங்கை அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தியிருந்தனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2578/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தில் மீள்குடியேற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குடும்பமொன்றுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் யாவை என்பதையும்;

(iii) குடும்பமொன்றுக்கு வழங்கப்படும் நிவாரணங்களின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நிவாரணங்கள் குடும்பமொன்றுக்கு போதுமானதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2704/ '12

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு பூராவும் உள்ள பிரிவேனாக்களின் அலுவல்களை மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள பிரிவேனா பரிசோதகர்களான தேரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பரிசோதகர்களான தேரர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் கல்வித் தகைமைகள் தனித் தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி பதவி வகிக்கின்ற தேரர்களின் வினைத்திறனின்மை மற்றும் குறைந்த கல்வித் தகைமைகள் காரணமாக பிரிவேனாக் கல்வி வினைத்திறனற்றதாக மாறியுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) மேற்படி நிலைமையை தவிர்ப்பதற்காக தகைமைகளுள்ள உத்தியோகத்தர்களை மேற்படி பதவிகளுக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல்,ஏன்?

2800/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரத்தில் 'தெயட்ட கிருள' கண்காட்சி நடைபெற்ற ஓயாமடுவ வீதியில் மூன்று கிலோமீட்டர் தூரம் காபட் இட்டு திருத்துவதற்காக வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை செலவிட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வீதியைத் திருத்துவதற்கான ஒப்பந்தத்தை வழங்கும் போது அங்கீகரிக்கப்பட்ட கேள்விப் பத்திர நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறெனின், அதற்காக விண்ணப்பித்த ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் பெயர்கள், முகவரிகள் மற்றும் கேள்விப் பத்திரப் பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கேள்விப் பத்திரத்தை வழங்கிய கம்பனியின் உரிமையாளரினதும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களினதும் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியைத் திருத்துவதற்காக காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின், கொள்ளப்பட்ட மொத்தக் காணியின் அளவு எவ்வளவு என்தையும்;

(iii) சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களது பெயர்கள், முகவரிகள் மற்றும் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்கூறிய வீதிகளைத் திருத்துவதன் கீழ் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மதகுகள், பாலங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வீதி இதற்கு முன்னர் திருத்தப்பட்ட திகதி மற்றும் எந்த நிலைமையின் கீழ் திருத்தப்பட்டது என்பவற்றையும்;

(iii) அந்த வருடத்தில் அதற்குச் செலவான பணத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2888/'12

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றுள்ளவாறு வெளிநாடுகளால் இலங்கையில் நியமிக்கப்பட்டுள்ள கௌரவ கொன்சுலேர்களின் எண்ணிக்கை என்ன என்பதையும்;

(ii) மேற்படி கொன்சுலேர்களின் பெயர்களை அவர்களின் நாடுகளுடனும்;

(iii) அவர்கள், தம் நாடுகளை இலங்கையில் என்ன திகதியில் இருந்து பிரதிநிதித்துவம் செய்கிறார்கள் என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சுனாமி தாக்கத்தின் போது கிடைத்த ஏதாவது நன்மையைத் தவிர, ஒவ்வொரு கொன்சுலேற்றினதும் பதவிக் காலத்தின் பொழுது இலங்கையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்மையை தனித்தனியாகவும்;

(ii) இலங்கையில் அவர்கள் மேற்கொள்ளும் விடயங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கு அவர்கள் அறிக்கை செய்துள்ளார்களை என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

## 2013 யூன் 21, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2580/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டின் தொழிலற்ற இளம் சந்ததியினருக்காக பிரதேச மட்டத்தில் கைத்தொழிற் சாலைகளை தாபிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், பிரதேச செயலாளர் மட்டத்தில் அத்தகைய கைத்தொழிற் சாலைகளைத் தாபிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்ற திகதி யாது என்பதையும்;

(iii) அந்நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்குகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக எவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2706/ '12

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை பம்புரண சாரிபுத்ர மகா வித்தியாலயத்தில் மேலதிக ஆசிரியர்களைப் பற்றி மாத்தறை வலயக் கல்விக் காரியாலயத்தின் உத்தியோகத்தர்களால் 2012 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட கணக்காய்வின்போது நீண்ட சேவைகாலமுடைய மேலதிக ஆசிரியர்களின் பெயர்பட்டியலொன்று தயாரிக்கப்பட்டதென்பதையும்;

(ii) மேற்படி பெயர் பட்டியல் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் வித்தியாலயத்தின் லொக் புத்தகத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இவ்வித்தியாலயத்தின் தற்போதைய அதிபருக்கு நெருக்கமான மேற்படி பெயர்பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்களை அங்கேயே வைத்துக்கொண்டு கற்பித்தல் நேரசூசியுடைய குறைந்த சேவைக்காலத்தை கொண்ட வேறு ஆசிரியர்கள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) அதிபரின் தான்தோன்றித்தனமான செயற்பாடு காரணமாக இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு பெரும் அநீதி நிகழ்ந்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையில் மேலதிக ஆசிரியர்களைப் பற்றி வலயக் கல்விக் காரியாலயத்தினால் நடாத்தப்பட்ட கணக்காய்வின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2802/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பண்டுவஸ்நுவர கிழக்கு மற்றும் மேற்கு பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் சமுர்த்தி பயனாளிகள் குடும்பங்களை இலக்காகக் கொண்டு தும்பினாலான பாத்திரங்களை உற்பத்தி செய்யும் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) அதற்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படிக் கருத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படி கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த உற்பத்தி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி உற்பத்தியைக் கொள்வனவு செய்யயும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(vii) தற்போது இந்தக் கருத்திட்டம் பெற்றுள்ள முன்னேற்றம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2896/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது கோமறைக் கழகம் இயங்குகிறதா என்பதையும்;

(ii) இதற்கு முன்னர் அத்தகைய கழகம் எப்போதாவது இயங்கியதா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், அது இயங்கிய காலப்பகுதி எது என்பதையும்;

(iv) கோமறைக் கழகம் அல்லது அதனையொத்த அமைப்புகள் இல்லாதொழிக்கப்பட்ட சூழ்நிலையில், நீதித்துறை முறையில் மேன்முறையீடுகளை மேற்கொள்வதற்கு இன்று காணப்படுகின்ற பொறிமுறைகள் எவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சுதந்திரமடைந்தது முதல் இன்று வரை பிரயோகிக்கப்பட்ட கடந்த காலத்தையும் அளாவிய சட்டங்கள் எவை என்பதையும்;

(ii) அவை எப்போது சட்டவாக்கம் செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டன என்பதைத் தனித்தனியாகவும்;

(iii) இலங்கையில் பொதுவாக கடந்த காலத்தையும் அளாவிய சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதையும்;

(iv) இல்லையெனில், 2003 — 2004 இல் வரி மன்னிப்புச் சட்டம் எவ்வாறு அமுல்படுத்தப்பட்டது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

2581/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தில் மின்சார வசதியற்ற கிராமங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) குறித்த கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

மாவட்ட வாரியாக வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே கூறப்பட்டுள்ள மின்சார வசதியற்ற கிராமங்களுக்கு எக்காலப்பகுதியில் மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும்;

(ii) 2012ஆம் ஆண்டினுள் வட மாகாணத்தில் மின்சார வசதியற்ற அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சாரத்தை வழங்கக் கூடிய இயலுமை உள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2707/ '12

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டுக்கு முன்னர் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் உதவி பிராந்திய முகாமையாளர் பதவிக்காக போட்டிப் பரீட்சையொன்றும் நேர்முகப் பரீட்சையொன்றும் நடத்தப்பட்டு, சேவையில் ஈடுபட்டுள்ள வேலைத்தள உத்தியோகத்தர் மற்றும் களஞ்சிய உத்தியோகத்தர் பதவிகளை வகிக்கின்றவர்களிலிருந்து தகைமை பெற்றவர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்படி போட்டிப் பரீட்சை நடத்தப்படாது நேர்முகப் பரீட்சையின் மூலம் மாத்திரம் மேற்படி பதவிக்கான நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேலே (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புகளை நிறுத்திவிட்டு 2012 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தவாறு மேற்படி ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2803/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கடற்றொழில் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தகர மீன் தயாரிப்புக்காக காலியில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலையின்,

(i) ஆரம்பத்திகதி யாதென்பதையும்;

(ii) உரிமையைக் கொண்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(iii) எதிர்பார்க்கப்படும் வருடாந்த உற்பத்தி எவ்வளவென்பதையும்;

(iv) அடைப்பதற்காக பயன்படுத்தப்படும் மீன் வகை அல்லது வகைகள் யாவையென்பதையும்;

(v) நாளாந்த மீன் தேவைப்பாடு எவ்வளவென்பதையும்;

(vi) உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் மேற்கூறிய மீன் வகைகளின் அல்லது வகையின் உள்நாட்டு நாளாந்த விளைச்சல் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறிய தகர மீன் தொழிற்சாலைக்குத் தேவைப்படும் மீன்கள் தற்போது இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) இன்றேல், அவ்வாறு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி மீன்கள் இறக்குமதி செய்யப்படும் அல்லது அவ்வாறு செய்ய எதிர்பார்க்கப்படும் நாடுகள் யாவை என்பதையும்;

(iv) மாதாந்தம் இறக்குமதி செய்யப்படும் அல்லது அவ்வாறு செய்ய எதிர்பார்க்கப்படும் மீனின் அளவு எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2901/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கம் நோயாளிகளுக்கு இலவச சுகாதார சேவையைத் தொடர்ந்து இலவச மருந்து வழங்குதலையும் மேற்கொள்கிறதா எனவும்;

(ii) அவ்வாறெனில், 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கான மீண்டுவரும் செலவுக்காக சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகையையும்;

(iii) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இலவச மருந்துகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகையையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அரசாங்க வைத்தியசாலைகளில் அதிகளவில் குறித்துக் கொடுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட 25 மருந்துகளையும்;

(ii) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அம்மருந்துகளின் பெறுமதிகளை தனித்தனியாகவும்;

(iii) அவை இறக்குமதி செய்யப்பட்டவையா அல்லது இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டவையா என்பதையும்;

(iv) அரசாங்க வைத்தியசாலைகளில் மருந்துகள் கிடைக்காமையால் வெளி மருந்துகளிலிருந்து மருந்துகளை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளமை பற்றி நோயாளிகள் ஏன் முறையிடுகின்றனர் எனவும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?